

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

## ஸ்ரீமான் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து

அவர்களின் சிவப்பேறெய்தியமை குறித்த

# நினைவுச் சுடர்

## In memory of Late Kathiripillai Sivakolunthu

29.08.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ். உடுப்பிட்டியைச் சேர்ந்த

அமரர்

# ஸ்ரீமான் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து

அவர்களின்

சிவப்பேறெய்தியமை குறித்த

# நினைவுச் சுடர்

## In memory of Late
## Kathiripillai Sivakolunthu

**29.08.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
இஃது

யாழ். மாவட்டம் வடமராட்சி உடுப்பிட்டியைச் சேர்ந்த
சைவப் பெருங்குடித் தோன்றலும் பெருநிலக்கிழாரும்
செல்வந்தருமாகிய காசிநாத உடையாரின் வழித்தோன்றலும்,
அமரர்கள் முருகுப்பிள்ளை, கதிரிப்பிள்ளை - மாணிக்கம்
தம்பதிகளின் அன்பு மகனும்
இணுவில் சிவகாமி அம்மன் கோவில் பதியைச் சேர்ந்த
உத்தம சைவ வேளாண் குலத்திலகருமான
மாணிக்கர் தியாகராஜரின் வழித்தோன்றலுமாகிய
அமரர்கள் சங்கரப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு
மருமகனும் தேவாம்பிகையின் அன்புடை
வாழ்க்கைத் துணைவரும்
தேவகுமாரி, கேசகுமாரி, புவனகுமார், புவனகுமாரி,
தாமகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும்
யோகேந்திரன், கேதீஸ்வரன் ஆகியோரின்
அன்பு மாமனாரும்
ஹர்ஷினி, அகிலேஷ் ஆகியோரின்
பாசமிகு பேரனுமாகிய

**அமரர்**


# ஸ்ரீமான் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து

**அவர்களின்**

# நினைவுச் சுடர்

# 29.08.2013


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டகைப்பிள்ளையார் ஆலயம்




சந்நிதி முருகன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும்
எமது நல்வாழ்வுக்காய் அர்ப்பணித்து.
எம்மை அறிவால் உயர்த்தி.
பண்பால் பெருக்கி. பாசத்தால் வளர்த்து
வையம் போற்றும் வண்ணம்
வாழ வழிசமைத்துத் தந்த
எங்கள் குடும்பத் தலைவர்
எம்மைவிட்டு அணைந்ததும் கொடுமையையா.
எமது அன்புத் தெய்வத்தின் இனிய நினைவுகளை
எங்களின் மனங்களில் சுமந்த வண்ணம்.
எமை என்றென்றும் ஆசீர்வதித்துக் கொண்டிருக்கும்
எமது ஆருயிர் தந்தையின் தாள்களுக்கு
இவ் நினைவுச் சுடர்
சமர்ப்பணம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி.**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

தேன் என் செயும் தீண்டிய விசம் தான் என் செயும்
கோள் என் செயும் கொடுங் கோல்தான் என் செயும்
வினை என் செயும் செய் வினை தான் என் செயும்
வேழமுகத்தான் என் உள்ளத்தில் வீற்றிருக்கையிலே.

## சரஸ்வதி துதி

எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவை எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம் பரிதி முன் பனியைப் போல
நண்ணிய நின் முன் இங்கு நடந்திடல் வேண்டும் அன்னாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



அஞ்சுமுகந் தோன்றின் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சேலென வேல் தோன்றும் – நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா வென் றோதுவார் முன்

(திருமுருகாற்றுப்படை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



வ்ளுஞ்ணாஆஜ் ள்கலுஞுஞ்லு ஞ்ஙிஞ்ணாஆஜ் ள்கலுஈத்ஞுு

ஶ்ிஜத்ளாி – வ்ளுஞ்ணாஆஜ் ஶ்மஜ் ஐஶிஜஜத்ுஞ ஶ்ிாவஜத்மி

வ்ளுஞ்ணாஆஜ் வ்ழாகருஇ ஞ்கிக்ஐஊளா ஶ்ாகருஓ

ஞ்லு ரிாமஞாளுஜ் ஞ்மஙி ாகருலு


(பகைப்ளுஞ்ாஙகருலுகுஷ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



தோற்றம்
30.06.1930

மறைவு
30.07.2013

அமரர்

# ஸ்ரீமான் க. சிவக்கொழுந்து

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விஜயத்து ஆடி யபரபக்கம்
பூண்ட நவமித் திதியதனில் - கூண்டுவிட்
டேகிச் சிவக்கொழுந்து சீவாக்யம் பெற்றுவிடும்
தேட்டம் தவக் கொழுந்துத் தேறல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

**பன்னிரு திருமுறை**

**தேவாரம்**

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது

**1ஆம் திருமுறை** **பண் - நட்டபாடை**

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானிவனன்றே

**2 ஆம் திருமுறை** **பண்- நட்டராகம்**

விருது குன்றமா மேருவி னாணர
வாவனலெரி யம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருதநின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.

**3ஆம் திருமுறை** **காந்தாரபஞ்சமம்**

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு நாயனார் அருளியது.

### 4ஆம் திருமுறை

### திருநேரிசை

மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணா
துனையுனு முணர்வை நல்கா யொற்றியூ ருடைய கோவே.

### 5ஆம் திருமுறை

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
றென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
றன்க டன்னடி யேனையுந் தாங்குத
லென்க டன்பணி செய்துகி டப்பதே.

### 6 ஆம் திருமுறை

### திருத்தாண்டகம்

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

## சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது

**7ஆம் திருமுறை** **பண் - பழம்பஞ்சுரம்**

ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென் னுடைய
தோழனுமா யான் செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கே னென்னாரு ரிறைவனையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள்
## திருவாசகம்
## 8ஆம் திருமுறை

அன்பினா லடியே னாவியோ டாக்கை
    யானந்த மாய்க்கசிந் துருக
என்பர மல்லா வின்னரு டந்தா
    யானிதற் கிலனொர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப்
    பரந்த முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
    சீருடைச் சிவபுரத் தரசே.

## திருவிசைப்பா

**9ஆம் திருமுறை** **பண்- பஞ்சமம்**

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
    ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றா
    லஞ்சலென் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்தசெஞ் சாலிக்
    கடைசியர் களைதரு நீலஞ்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலி யூர்த்
    திருவளர் திருச்சிற்றம் பலமே.

## திருப்பல்லாண்டு

**9ஆம் திருமுறை** **பண்- பஞ்சமம்**

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவுபெற் றேன்பெற்ற தார்பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமந்திரம்**
**10 ஆம் திருமுறை**

அகர மாயிர மந்தணர்க கீயிலென்
சிகர கோபுரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூன் பலத்துக்கு
நிகரிலை யென்பது நிச்சயந் தானே.

**பொன் வண்ணக் தந்தாதி**
**11ஆம் திருமுறை**

ஒழித்தேன் பிறவியை யூர்ந்தே
    னுவகையை யோங்கிற்றுள்ளம்
இழித்தே னுடம்பினை யேலேன்
    பிறரிடை யிம்மனையும்
பழித்தேன் பழியே விளைக்கும்பஞ்
    சேந்தியக் குஞ்சரமுந்
தெழித்தேன் சிவனடி சேர்ந்தே
    னினமிகத் தெள்ளியனே

**12ஆம் திருமுறை**
**பெரிய புராணம்**

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமைவேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும் போது உன் அடியின் கீழிருக்க வென்றார்.

**திருப்புகழ்**

காலனிடத் தணுகாதே
        காசினியிற் பிறவாதே
சீலவகத்திய ஞான
        தேனமுதை தருவாயே
மாலயனுக் கரியானே
        மமாதரவைப் பிரியானே
சோலை மலைக் குரியானே
        ஸ்வாமிமலைப் பெருமாளே

**வாழ்த்து**

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் லோங்க நற்றகம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெலாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஷ்ட தெய்வப் பாமாலை

## 01. உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார்

*இடுப்பினிலே உடுப்புடுத்து உணர்வுவந்த காலம் தொட்டு*
*இடுகாடு போகும்வரை இதயத்தில் இருத்திய*
*உடுப்பிட்டிப் பண்டகை பிள்ளையார் பொற்பதத்தை*
*உளமார வழுத்தியும் தொழுதும் பற்றியவுன்*
*கடுப்பில்லா கனிவான கருத்துறை கதைபகிரும்*
*கதிரிப்பிள்ளை சிவக்கொழுந் தெனும்நாம*
*துடுப்பே சாகரக் கரைசேர்க்கும் உன்கருணைத்*
*துணையே அன்னார் தவக்கொழுந்தாம் தலை!*

*பண்தகை மருவியோ பண்டகை யானதோ*
*எண்திசை யுன்னருள் ஏற்றமாய் பரவவே*
*கண் தகை கொண்டிடும் கருத்தான பிரசங்கம்*
*மண் தகை கொண்டிடச் செய்வித்தோன் சிவபதமே!*

## 02. சந்திரசேகர வீரபத்திர சுவாமி

*சந்திர சேகர வீர பத்திரா உனைக்*
*சந்ததமும் தொழுந்தீர சிவக்கொழுந் துவின்*
*சந்ததி யுன்பதம் சேர்த்திடுமா மாறு அருள்*
*சந்திர தண்ணொளி யவர்பால் தருவது நிஜமே!*

*சந்தன் தவறாச் சங்கதிச் சங்கீதச்*
*சுந்தர சுகமுன் சந்நிதி யடைந்தால்*
*எந்திரம் போலவர் எந்நேரமும் தொழுத*
*யந்திரப்பாவை ஆட்டுவித்தவன் நீயிலையோ*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி

முருகா எனமுன் உருகும் உளத்தன் உனை
அருகா நாறுண்டோ சந்நிதிக்களந்தா கருணைக்
குருவே குகனே சோதண்டராமன் மருகே, கொழுந்தர்
அருளே அவருன்அடியே பிடித்துயவே அருளே

மதியில் சிறந்த நின்பதிபோல
நிதியில் சிறந்த சந்நிதியே கந்தா
விதியின் வரியை அழிக்கும் திருப்பாத
மிதியில் மகிழ்ந்த கொழுந்தர் உயர்வே!

## 04. தொண்டையம்பதி வீரமாகாளி

வீரமோ சிறப்பு "மா" வோ பெரிது காளியோ ஊழித்தீ
தீரமோ மறைப்பு பக்தியோ பெரிது காளியுன் காலதூதீ
ஈரமோ பிறப்பு நோயதை அறுத்து ஈசனே சேர்ந்திட உன்
பாரமேஆன பக்தன் கொழுந்தனை பரமுத்தி சேர்குதியே

## 05. வல்வை சிவன் துதி

அத்துவித வஸ்த்துவே அன்பன் சிவக்கொழுந்தின்
தத்துவ விளக்கமே நமசிவாய வல்வைச்சிவ
தத்துவா நத்துவார் தாதாமிய ஒண்பொருளே
அத்துவாக்கள் கடந்து அவருள் அத்துவிதமாகினரே!

## 06. வல்லிபுர ஆழ்வார்

பன்னிரு ஆழ்வார்கள் பனுவல் தனுட்தன்னைப்
பின்னிருக்கை செய்த பித்தன் கொழுந்தருள்
பன்னிருகை மருகன் பண்டகையன் தம்பியைத்
தன்னிருகையால் தொழுதான் வாழ்வுச்சக்கர மறுத்திடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. இணுவில் சிவகாமியம்மன்

காமியாகினால் ஆசாமியாகுவர் சிவ
காமிநாடினால் காமமறுந்துய்குவர் சுக
வாசியாகுவர் கொழுந்தர் உன் பதவித
வாசியாகினார் விண்ணுற்றனரே!

## 08. இணுவில் வைரவர்

ஒருதலை கிள்ளிஒடுக்கினர் பிரமன்
தறுதலைப் போக்கால், தரணி அறிந்தது
இருதலைக் கொள்ளி எறும்பினர் உலகில்
மறுதலை யின்றியுனில் மயங்கிய சிவக்கொழுந்தே!

## 09. அச்சுவேலி மகிழடி வைரவர் துதி

கடமை யாற்றுகையில் திகண்ணுங் கருத்துமாய் தன்
உடமை வழிபடுதல் உண்மை எனத் திருவம்பாவின்
நாலாம்
தடம் பதித்துப் பூசை தன்னுணர்வால் செய்து அச்சுவேலி
இடம் மகிழடி வைரவரை இருத்திய மனத்தர்
சிவக்கொழுந்தே

சீலம் சிறக்கச் சைவம் வளரத்தன்
காலம் முழுதும் கடமை கடவுளை - தொழுது
ஞாலம் சிறக்கும் ஞானம் உடையவராய் மனப்
பாலம் போட்டு மக்கள் மனமிருந்தார் முத்தியுறவே.

## 10. ஆவரங்கால் சிவன்

சிவன் கால் பற்றிச் சலமெனும் நலமுய்ய
அவன்வரம் வேண்டி அநுதினம் நோற்கும்
தவம் நாம் கொண்டு தளரா மனத்தராய்
சிவக் கொழுந்தர் சான்றாய் சார்ந்திட உயர்வே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து அவர்களின் வாழ்க்கை வட்டம்

முத்தும் மணியும் பொலிந்து விளங்கும் இவ் ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்தது யாழ்ப்பாணம், யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியில் அமைந்த உடுப்பிட்டி எனும் திவ்விய கிராமத்தில் சிறந்த முறையில் பல ஆலயங்கள் புடைசூழ பச்சைப் பசேலென்ற வயல்வெளியும் புற்தரையும் பனந்தோப்புகளும் சீரான தோட்ட நிலங்களும் உள்ள இவ்வூரில் பண்டகை எனும் பழம் பெரும்பகுதியில் அமரர் காசிநாத உடையாரின் வழித் தோன்றலாகிய அமரர்கள் கதிரிப்பிள்ளை மாணிக்கம் தம்பதிகளின் 7 ஆவது புத்திரனாக **30.06.1930** ஆம் ஆண்டு பிறந்தார் இவருக்கு 6 ஆண் சகோதரர்களும் 3 பெண் சகோதரர்களும் இருந்துள்ளனர் இவர்களில் மூவர் பல வருடங்களுக்கு முன் காலம் சென்றுவிட்டனர். மற்ற ஐவர் சென்ற பல வருடங்களுக்கு முன் காலமாகி விட்டனர்.

அமரர் சிவக்கொழுந்தும் இவரின் தமையனார் அமரர் பாலசிங்கமும் இவர்களின் தாயின் சகோதரி திருமதி வாராத்தைப் பிள்ளை குமாரசுவாமியுடன் அவர்களின் பழைய விதானையார் வளவில் வளர்ந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது ஆரம்பக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை (A.M School இப்பொழுது A.M College) யில் பயின்று J.S.C தராதரப் பத்திரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார் தேர்ச்சியடைந்ததன் பின் அஞ்சல் திணைக்களத்தில் **1951** ஆம் ஆண்டு கவுண்டர் எழுதுவினைஞராக கொழும்பில் கடமை யேற்றார். இக்காலப்பகுதியில் மருதானையில் தனது மாமனார் கொழும்பு டிஸ்திரிக்கோட் மொழிபெயர்ப்பாளர் வேலுப்பிள்ளை அவர்களுடன் **28** wilson street இல் தங்கியிருந்தார். இக்கால கட்டத்தில் அமரர் கலாநிதி இராசையா மகாலிங்க சிவத்துடன் பிரபலமான வழக்குகளில் ஆஜராகும் சட்டத்தரணிகளின் வாதங் களை அவதானிக்க மேல் நீதிமன்றம் செல்வது வழமை அவற்றுள் சில DR.D.N Povit Q C ஆஜராகிய தயாவதி குணவர்த்தனாவின் யூரிமார் அற்ற வழக்கு செனட்டர் நடேசன் Q C ஆஜராகிய இலங்கரத்தினாவின் தேர்தல் வழக்கு ஜீஜீ பொன்னம்பலம் QC ஆஜராகிய ரஞ்ஜினி ராக்சி வழக்கு ஆகியவை ஞாபகத்திலுள்ளதாக அடிக்கடி கூறிப் பெருமையடைவார்.

**1959 - 1960** காலப் பகுதியில் Postal training School - colombo **1960** ஆம் ஆண்டு தபால் அதிபராக இரத்தினபுரி தபால் அலுவலகத்தில் கடமையேற்றார் அங்குள்ள சிவன் கோவில் வளர்ச்சிக்காக தன்னால் இயன்ற உதவிகளை செய்துவந்தார்.

**1965** ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் கொழும்பு மட்டக்களப்பு, கொழும்பு - யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு தபால் பட்டுவாடா செய்யும் புகையிரத சேவையில் கடமை புரிந்தார்.

இக்காலகட்டத்தில் **1966** ஆம் ஆண்டு இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த அமரர் மாணிக்கர் தியாகரர்ஜர் வழித்தோன்றல் அமரர்கள் சங்கரப்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் மூன்றாவது புதல்வி தேவாம்பிகையை திருமணம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் இருவரும் இல்லறமே நல்லறம் என்று வாழ்ந்து வந்தனர். இவர் நான்கு பெண்மகவுகளுக்கும் ஒரு ஆண்மகனுக்கும் தந்தையானார். பிள்ளைகள் யாவரும் தற்போது தங்களுக்கு விரும்பிய அரச உத்தியோகங்களில் சிறப்பாகக் கடமையாற்று கின்றனர்.

1969 - 1971 காலப்பகுதியில் மதவாச்சி தபால் அலுவலகத்தில் தபால் அதிபராகக் கடமையாற்றினார்.

மீண்டும் 1972 - 1975 காலப்பகுதியில் முகத்துவாரம் தபால் அலுவலகத்தில் தபால் அதிபராகக் கடமையாற்றினார்.

இக்காலகட்டத்தில் வடகொழும்பு இந்துபரிபாலன சங்கத்தின் தலைவராக செயலாளராக பணிபுரிந்துள்ளார். 1973-74 இல் முகத்துவாரம் கதிற்றல் தமிழ் கலவன் பாடசாலையை மூடவேண்டும் என சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில் வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் அன்றைய தலைவராய் இருந்த அமரர் க. சிவக்கொழுந்து அவர்களின் சாதுரியத்தினாலும் அயராத உழைப்பினாலும் பாடசாலைவிடயம் கொழும்பு வடக்கு உறுப்பினரும் பாராளுமன்ற விளையாட்டுத்துறை அமைச்சருமான உயர்திரு வின்சன்ற் பெரேரா அவர்களினால் தேசிய அரசுப் பேரவையில் அப்போது எதிர்க்கட்சி உறுப்பினராய் இருந்தும் எழுப்பப்பட்டது. அவர் குரலுக்கு செவிமடுத்து பாடசாலையை வேறிடத்துக்கு மாற்றுவதற்கு 80,000/= ரூபாவை ஒதுக்கி மிகுதி 70,000/= ரூபாவை சேர்க்கும் பொறுப்பை பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் தலையில் கல்வித்திணைக்களம் சுமத்திற்று.

இச்சந்தர்பத்திற்றான் செயற்றிறம் மிக்க அமரர் க. சிவக் கொழுந்து அவர்களது இல்லத்தில் ஓய்வுபெற்ற கொழும்பு பிரதம நீதிபதி B.G.S David அவர்கள் தலைமையில் 19.12.74 இல்

பாடசாலை நலம் பேணும் மன்றத்தை அமைத்தனர். 51 பேர் கொண்ட பாடசாலை நலன்புரிச் சங்கம் வடகொழும்பு இந்து பரிபாலன சங்க உறுப்பினர்களையே அவ்வபிவிருத்திச் சங்க உறுப்பினர்களாக்கி கொழும்பு வடக்கு பா.உ.கௌரவ வின்சன்ற் பெரேராவின் உதவியுடன் மூடுவிழா நடாத்த இருந்த பாடசாலையை முத்துவெல மாவத்தையில் உள்ள ஓர் தனியார் வீட்டைக் கொள்வனவு செய்து இயங்க வைத்து இன்று முகத்துவாரம் இந்துக் கல்லூரியாகத் திகழ வழி செய்தவர்களுள் அன்னாரும் ஒருவராவார் இந்தத்தனியார் வீட்டைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிதியைச் சேகரிப்பதற்கு Dr.T. நல்லநாதன், இரா.சம்பந்தன், V வேலும் மயிலும், சே.சிவராசா அமரர் Dr. இராசையா மகாலிங்கசிவம், வேலாயுதபிள்ளை அவர்களுடன் அமரர் க. சிவக்கொழுந்து அவர்களும் நிதி திரட்டி ஒரு காணியைப் பழைய கட்டடத்துடன் விலைக்கு வாங்கி கதீற்றல் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயரிலேயே பாடசாலையை நடாத்த உதவி செய்தார்.

நிதி வசூலுக்காக சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் Sun musical fiesta குழுவினரால் நடாத்தப்பட்ட pop show இல் பாடசாலையின் 1 ஆவது மலரினை வெளியிட ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்.

இக்கல்லூரியின் இரு மாடிக்கட்டட திறப்பு விழா மலரில் பா. உ கௌரவ வின்சன்ற் பெரேரா தனது செய்தியில் சிறப்பாக செயற்பட்டுள்ளார் என அமரர் க. சிவக்கொழுந்தினைப் பாராட்டியுள்ளார். அப்பாடசாலையின் அதிபர் திருமதி எஸ் உலகசேகரம் தனது குறிப்பில் வடகொழும்பு இந்துபரிபாலன சங்கத்தின் பொது செயலாளர் அமரர் திரு. க. சிவக்கொழுந்து அவர்களை பாராட்டி இருந்தார் அத்துடன் எமது பாடசாலை புத்துயிர் பெற காரணகர்த்தாவாகச் செயல்பட்ட வடகொழும்பு இந்து பரிபாலன சங்க செயலாளர் அமரர் திரு. க. சிவக்கொழுந்து அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன் என்னும் அவரது வாசகங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நினைவு கூற விரும்புகின்றேன்.

கொழும்பு 15 கோயில் வீதி 40 ஆம் இலக்கத்திலுள்ள கலாச்சார மண்டப கட்டட வசூலுக்காக வடகொழும்பு இந்து பரிபாலன சங்கத்தால் 1978 ஆம் ஆண்டு பிரபல தென்னிந்திய பாடகிகள் சூலமங்களம் சகோதரிகளின் இன்னிசைக் கச்சேரிக்குத் தலைமை தாங்க முன்னை நாள் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனை அழைப்பதற்குப் பிரபல சட்டத்தரணி C.இரங்கநாதன் QC உடன் அமரர் சிவக்கொழுந்தும் சென்றிருந்தார். பல நூற்றுக் கணக்கான ரசிகர் முன் பிரதம நீதியரசர் தலைமையில் கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற சூலமங்களம் சகோதரிகளின் கச்சேரிக்கு வருகை தந்த அதிவிஷேட பிரமுகர்களை (VIP) வரவேற்பதற்கும் முன் நின்று உழைத்தார்.

அக்கால கட்டத்தில் மிகவும் பிரபலமான எம்.ஜி.ராமச்சந்திரனின் படமான "மீனவ நண்பன்" படத்தினையும் கட்டட நிதி வசூலுக்காக பல நூற்றுக் கணக்கான மக்களின் ஆதரவுடன் கதிரேசன் மண்டபத்தில் அகலத்திரையில் போட்டுக்காட்டுவதற்கு படக்கூட்டுத்தாபனத்தாரின் அனுமதியைப் பெற முன் நின்று பலவழிகளிலும் உழைத்தவர்.

வடகொழும்பு இந்துபரிபாலன சங்கத் தலைவர் செயலாளராக இருந்த காலங்களில் மகாசிவராத்திரி விழாக் காலங்களில் பல தெய்வீகப் பேருரைகள் நடாத்துவதற்கும் தன்னால் இயன்ற பங்களிப்பினை வழங்கினார்.

அறநெறிப் பாடசாலை ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறுவதினையும் ஆதரித்தார். இதன் மூலம் பல நூற்றுக்கணக்கான மாணவர்களை விவேகானந்த சபையினரால் நடாத்தப்படும் சைவ சமயப் பரீட்சைகளில் கலந்து கொள்ளச் செய்து பாராட்டுப் பத்திரங்களும் பரிசில்களும் பெற வழிகாட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர் பொன் இராமநாதன் சேர் பொன் அருணாச்சலம் போன்றவர்களின் நினைவு நாட்களில் இருந்து சமய கலாச்சார அமைச்சுடன் இணைந்து வடகொழும்பு இந்து பரிபாலன சபையினரும் மலர்மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளிலும் மிகவும் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் பங்கு பற்றினார்.

திருவெம்பாவைக் காலங்களில் அருள்மிகு அருணா சலேஸ்வரர் ஆலயத்தில் இருந்து ஒவ்வொரு வீதி வழியாக திருவெம்பாவை பஜனைப் பாடல்கள் பாடிய வண்ணம் செல்லும் சிறார்களுக்கு அக்காலத்தில் இருந்த தனவந்தர்கள் மூலம் பாடசாலைக் கொப்பிகள், உபகரணங்கள் வழங்குவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டார். இவ்வீதிப் பஜனை ஜிந்துப்பிட்டி கோயில் பொன்னம்பலவாணேஸ்வர் கோயில் ஆகிய இடங் களுக்குச் சென்று பாடி கால்நடை ஊர்வலமாக மீண்டும் குறிப் பிட்ட நேரத்தில் அருணாசலேஸ்வரர் திருவெம்பாவை பூசையில் கலந்து கொள்ள வருவதற்குரிய ஒழுங்குகளை மேற் கொண்டார்.

இடையில் ஒருவருட காலம் உடப்புசலாவ் தபாலகத்தில் தபால் அதிபராக கடமையாற்றிய வேளையில்கூட வடகொழும்பு இந்து பரிபாலன சபையுடன் இணைந்து பல அரியபெரிய தொண்டுகளை ஆற்றினார்.

பரிபாலன சபைக்கு ஓர் மணிமண்டபம் வேண்டுமென பல வழிகளிலும் முயற்சித்த பெரியார்களில் இவரும் ஒருவர். இவர் செய்த சேவைகளுக்காக வடகொழும்பு இந்துபரிபாலன சபை தனது பொன்விழா 2004ஆம் ஆண்டு நடந்த வேளை அன்னாரையும் கௌரவித்து கேடயம், பதக்கம், பொன்னாடை போன்றவற்றினை வழங்கி கௌரவித்தது எனினும் நாட்டின் சூழ்நிலை காரணமாக அவ்வாண்டு அன்னாரால் அவ்விழாவில் பங்கு பற்றமுடியவில்லை 2007ஆம் ஆண்டு கொழும்பு சென்ற வேளையில் இக்கேடயம், பதக்கம் பொன்னாடை ஆகியவற்றை அமரருக்கு வழங்கி கௌர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தனர்.

*1977 - 1980* காலப்பகுதியில் மீண்டும் கொழும்பு பிரதம தபாலகத்தில் தபால் பட்டுவாடா செய்யும் புகையிரத சேவையில் கடமையாற்றினார்.

*1981* காலப்பகுதியில் பருத்தித்துறை தபாலகத்தில் தபால் அத்தியட்சகராக கடமையாற்றினார்.

*1981-1988* காலப்பகுதியில் அச்சுவேலி பிரதம தபாற் கந்தோரில் தபால் அத்தியட்சகராக கடமையாற்றி வரும் வேளையில் தபாலகம் உள்நாட்டு யுத்த சூழ்நிலையில் கடுமையாக சேதமடைந்து விட்டது. இவ்வேளையில் தபாலக ஊழியர்கள், அவ்வூர் பெருமக்கள் பிரபல சட்டத்தரணி அமரர் திரு பாலசிங்கம் இவர்களின் உதவியுடன் அச்சுவேலியில் ஒரு வீட்டினை கொள்வனவு செய்து அங்கு தபாலகத்தை இயக்க பலவழிகளிலும் முயற்சி செய்து வடமாகாண அஞ்சல் அதிபரின் அனுமதியுடன் அவ்விடத்திலே தபாலகம் இயங்க வைத்தார். இன்றும் அவ்விடத்திலேயே அச்சுவேலி தபால் அலுவலகம் இயங்குகின்றது என்பதை மிகவும் மனமகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன்.

அச்சுவேலியில் இருந்த காலத்தில் லயன்ஸ் கிளப் உறுப்பினராகவும் உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

*1988* காலப்பகுதியில் மன்னாரிற்கு இடமாற்றம் பெற்று மூன்று மாத காலம் பணியாற்றி இருந்த வேளையில் *1989* காலப்பகுதியில் பதவியுயர்வுடன் சிலாபம் பிரதம தபால் அலுவலகத்தில் பிரதம தபால் அதிபராக கடமையேற்று மிகவும் சிறப்புடன் பணியாற்றி *29.06.1990* ஆண்டு ஏறத்தாழ *40* வருட சேவையை நிறைவு செய்து ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு பெற்ற பின்பு சமயப் பணிகளில் கூடுதலாக ஈடுபடத் தொடங்கினார். அதற்கு உறுதுணையாக தனது சொந்த இடமான உடுப்பிட்டியிலே நிரந்தரமாக இருந்தார். பண்டகைப் பிள்ளை யார் ஆலயத்தில் மகோற்சவம் நடைபெறுவதற்கு பலவழிகளிலும் முயற்சிசெய்து முதலாவது கொடியேற்றத்துடன் 1993ஆம் ஆண்டு திருவிழா தொடங்கியது அப்பொழுது ஆனி உத்தரட்டாதியில் தீர்த்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.2002 ஆம் ஆண்டு 2 ஆவது கும்பாபிஷேகம் நடைபெற்றதின் பின்னர் ஆடி அமா வாசையன்று தீர்த்தம் நடைபெற்றால் மக்கள் தங்கள் முன்னோர் களுக்கு செய்ய வேண்டிய பிதிர்கடன்களை இவ்வாலயத்திலே செய்யலாம் என ஊர்மக்களுடன் கலந்தாலோசித்து பல குருக்கள் மார்களின் ஆலோசனையையும் கேட்டு 2002 ஆம் ஆண்டு ஆடி அமாவாசை அன்று தீர்த்தம் நடைபெறுவதற்கு ஏதுவாக அன்றி லிருந்து முன் பத்து நாட்களுக்கு முன்பாக கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெறும்ஒழுங்குகளைச் செய்தார்.

உடுப்பிட்டி நகரில் உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் நிர்வாக சபை உறுப்பினராக இருந்துள்ளார். கூட்டுறவுக் கடையிலும் உறுப்பினராக தனது கடமையைச் செவ்வனே செய்துள்ளார்.

செல்வச்சந்நிதி - சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆரம்பத்தில் உறுப்பினராக இணைந்து நிர்வாகசபை உறுப்பினராகி தனது அயராத உழைப்பினால் சந்நிதியான் ஆச்சிரம கலைபண்பாட்டுப் பேரவையின் உபதலைவராகி பேரவையின் வளர்ச்சியோடு பேரவையினால் வெளியிடப்பட்டு வரும் ஞானச்சுடர் வெளியீட் டிற்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கி வந்தார் அத்துடன் ஞானச்சுடர் மலரினை இந்து கலாச்சார அமைச்சில் பதிவுசெய்து வெளியிடுவதற்கான பலகாத்திரமான உதவிகளையும் புரிந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை இறைபணி ஆற்றுவதிலே செலவிட்டுள்ளார். ஆகையால் தான் பண்டகைப் பிள்ளையார் தனது உற்சவ காலத்தில் மூன்றாம் நாள் தன் பாதாரவிந்தங்களுக்கு சிவக்கொழுந்துவை அழைத்துச் சென்றாரோ? அதுமாத்திரமா தொண்டைமானாறு செல்வச் சந்நிதியின் ஆலய திருவிழாக் காலம், நல்லூர் கந்தசாமி திருவிழாக் காலம் தான் இறுதியாகப் பணியாற்றிய சிலாபம் முன்னேஸ்வரநாதர் ஆலயம் மண்டூர்கந்தசாமி கோயில் கதிர்காமம் - இவ்வாறு தான் சேவை யாற்றிய எல்லா இட ஆலய உற்சவ காலங்களில் தனது இறுதிப் பயணத்தை ஆரம்பித்ததை என்னவென்று கூறுவது.


மண்ணில் பிறப்பவர் யாவரும் என்றோ ஒரு நாள் இறைவன் தாள் சேரவேண்டும் என்பது நியதி யோகர் சுவாமிகள் கூறியது போல் எப்பவோ முடிந்த காரியம் - இப்பொழுது நிறைவேறி இருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலி தபால் அலுவலகம் திறப்புவிழா



அச்சுவேலி தபால் அலுவலகத்தில் இருந்து மாற்றம் பெற்றுச் செல்லும் பிரிவுபசார வைபவத்தில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. க. சிவக்கொழுந்து J.P

திரு. க. சிவக்கொழுந்து J.P அவர்களை யான் உடுப்பிட்டியில் உள்ள பண்டகைப்பிள்ளையார் ஆலய உற்சவ காலத்தின் மூலம் அறியநேர்ந்தது. கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு மேல் இவ் ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ளும் பாக்கியம் பிள்ளையார் தந்தருளினார். யாழ்ப்பாணத்தில் எத்தனையோ ஆலயங்கள் இருந்தபோதிலும் இத் தலத்திலுள்ள பிள்ளையாருக்கு எங்கள்மேல் அலாதியான அன்பு அழியாது. வாழ்க்கையில் பல இன்னல்கள் ஏற்பட்ட பொழுது பிள்ளையார் அடியேனையும் காலம் சென்ற திரு. சிவக்கொழுந்தையும் என்றும் கைவிடவில்லை.

திரு. சிவக்கொழுந்து வாழ்ந்த காலத்தில் முன்கூட்டியே இந்த ஆலய திருவிழாவைப் பற்றி அறிவித்துவிடுவார். சென்ற முறையே தனது உடல் நலக்குறைவு பற்றிக் கூறியுள்ளார். யான் இவர் உடல்நலக் குறைவால் இருப்பதை மானசீகமாக அறிந்து கொடியேற்றத் திருவிழாவுக்கு வந்தேன். இவரது நேர்மையான வாழ்வு, பக்தி எங்களைப் போன்றவர் களுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

பண்டகைப் பிள்ளையார் இவரது ஆத்மாவுக்கு தமது திருப்பாதங்களில் இடம் அளித்திருப்பார் என்று நம்புகின்றேன்.

அன்புள்ள

அன்னையின் அடியவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவின் அஞ்சலியுரை

அடியேன் அன்புடன் பி. எம் என்று அழைக்கும் அமரர் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து அவர்கள் இறைபதம் அடைந்த துயரச் செய்தியினை உதயன் நாளிதழைப் பார்த்து ஆழ்ந்த அதிர்ச்சியும் துயரமும் அடைந்தேன்.

இவரை நான் நன்கு அறிந்திருந்தாலும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை மூலம் இவருக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாகியது. அதில் இவர் ஆரம்பகாலம் தொட்டு சிறப்பாக செயலாற்றி நிர்வாக சபை உறுப்பினராகக் கடந்த 10 வருடகாலம் உப தலைவராக செயற் பட்டு பேரவையின் வளர்ச்சியோடு, பேரவையினரால் வெளி யிடப்படும் ஞானச்சுடர் வெளியீட்டிற்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கியவர். இவரின் மறைவு பேரவைக்கு மட்டு மல்ல சைவத்திற்கும் தமிழுக்கும் ஈடில்லாத இழப்பாகவே கருத வேண்டும்.

இவர் எண்பத்து மூன்று வயது வரைக்கும் என்றும் பதினாறு வயது மார்க்கண்டேயர் போல இளமைத் தோற்றத்து டன் நடமாடிய ஓர் நடமாடும் மனித தெய்வம் ஆவார். மேலும் அகில இலங்கை சமாதான நீதிபதியாக விளங்கி நம் மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மண்ணில் அரும்பெரும் சமூகசேவை செய்த ஒரு சிறந்த சமூகத்தொண்டனுமாவார். அத்துடன் நின்று விடாது பண்டகைப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபை தலைவராக இருந்து வருடங்களும், வட கொழும்பு இந்து பரிபாலன சபையிலும், அச்சுவேலி லயன்ஸ் கிளப்பிலும் இருந்து அரிய சேவைகள் செய்து அனைவரதும் பாராட்டையும் பெற்ற ஒரு மகான் எனலாம். "தோன்றிற் புகழொடு தோன்றும் அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவர் வாக்கிற்கமைய வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த ஓர் மாமனிதர் இவராவார். நான்கு பெண் மகவுகளையும் ஒரு ஆண் மகனையும் பெற்று அவர்களை சீரும் சிறப்புமாக வளர்த்து கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக்கி, அரச பதவிகளில் அமரவைத்தவர். தானும் பிரதம தபாலதிபராக 40 வருடங்கள் அரசசேவையில் சிறப்புடன் பணியாற்றி அனைவரதும் பாராட்டுக்களையும் பெற்றவர்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு அடியேன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா அம்பிகையின் பாதார விந்தங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் J.P,
இந்துமத குரு பீடாதிபதி,
அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்.
2013.08.15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுப்பிட்டி வீரபத்திரர் தேவஸ்தான பிரதம குருவின் அஞ்சலியுரை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

என்பது வள்ளுவன் வாக்கு. இதற்கு அமைய வாழ்ந்தவர் தான் அண்மையில் மறைந்த க.சிவக்கொழுந்து அவர்கள். பண்டகைப் பிள்ளையார் ஆலயத்தின் தலைவராய் இருந்து இறைபணி செய்தும் சமாதான நீதவானாக இருந்து பொதுச் சேவையும் செய்த அன்னாரின் இழப்பு ஈடுசெய்யமுடியாதது. அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆத்மா சாந்தியடைய முழுமுதற் கடவுளாகிய பண்டகை விநாயகரையும் பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமானையும் திரிகரண சுத்தியுடன் பிரார்த்திக் கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மூவுலகிலும் சாந்தி நிலவுக.

கனக கேதீஸ்வரக் குருக்கள்,
வீரபத்திரர் தேவஸ்தானம்,
உடுப்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டகைப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு கு. சேவற்கொடியோன் குருக்கள் வழங்கிய இரங்கலுரை

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெரு மதிப்புக்குரிய க. சிவக்கொழுந்து தலைவர் அவர்கள் **30.07.2013** அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியைக் கேட்டவுடன் ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்தேன். மறைந்த தலைவர் அவர்கள் பண்டகைப்பிள்ளையார் ஆலயத்தில் பல வருடங்களாக தலைவராக இருந்து தனது ஆளுமையால் ஆலயத்திற்கு பல அளப்பெரும் சேவைகளைச் செய்துள்ளார். இவர் இல்லாத இந்த வெற்றிடத்தை இனி யாராலும் நிரப்பமுடியாது. தலைவர் அவர்கள் கோவில் கிரியை விளக்கம். சோதிடம் போன்றவற்றில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

இவருடைய இழப்பு இவருடைய குடும்பத்தாருக்கு மட்டுமல்ல சைவசமய உலகத்திற்கே பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல பண்டகைப் பிள்ளை யாரை பிரார்த்தித்து வணங்குவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கு. சேவற்கொடியோன் குருக்கள்,
பிரதமகுருக்கள், பண்டகைப்பிள்ளையார் கோவில்.
பிரதமகுரு,
தச்சன் கொல்லை சித்திவிநாயகர் ஆலயம், தொண்டைமானாறு.
பிரதமகுரு ஆதீன கர்த்தா,
சூரைப்பிட்டி வைரவர் கோவில், கெருடாவில் தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதி ஐயா தரும் செய்தி

அமரர் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து எந்தை காலத்தவர். அவரை யான் சிறுவயதிலிருந்து அறிவேன். பெயருக்கேற்ற முருக பக்திக் கொழுந்தாகவே நான் கண்டு இருக்கிறேன். அவர் செல்நெறி காலச் சிறப்பானது. அணுகுமுறை யாரையும் கவரும். அவர் உடுப்பிட்டி பண்டகை ஆலய அறக்காவலர்களுள் ஒருவர் என்பதும் நாம் அறிந்த ஒன்று.

நாம் சந்நிதியில் பூசகராக இருந்த போதிலும் லௌகீக ரீதியில் அவரின் அன்பு முகம் காணாதது மன ஏக்கத்தைத் தருகின்றது. அந்த அளவில் என் மனதைத் திருடிவிட்டார் போலும்.

அவர் பிரிவால் கவலை உறும் அவர் குடும்பத்தினருக்கு "யாமிருக்கப் பயம் ஏது" என்று கூறாமல் கூறும் முருகன் துணை அவர்களுக்கு என்றும் இருக்க தொண்டைமானாற்று ஆற்றம் கரையான் - சந்நிதி முருகனை வேண்டி இறைஞ்சுகின்றோம்.

இவண்,
அகிலேஸ் குருக்கள்,
குட்டி ஐயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வச்சந்நிதி ஆலயம்

சிவஸ்ரீ க. உலககுருநாத ஐயர்
பிரதமகுரு

செல்வச்சந்நிதி ஆலயம்.
தொண்டைமானாறு.

## செல்வச்சந்நிதியான் திருப்பாதக் கமலங்களைச் சரணடைந்த சீரிய செம்மையாளன்

ஆற்றங்கரையுறையும் அற்புதவேற்பெருமானின் பாதார விந்தங்களைப் பரிபூரணமாகச் சரணடைந்து, வேற்பெருமானின் தீவிரபக்தனாக விளங்கியவரே அமரத்துவமடைந்த ஸ்ரீமான் சிவக்கொழுந்து ஐயா அவர்கள் முருகன்மீது அளவிறந்த பக்தியும் முருகன் தொண்டில் மட்டற்ற ஆர்வமுமுடையவராக விளங்கிய அமரர் அவர்கள் எமது தந்தையாராகிய இறைபதமெய்திய மெத்தைவீட்டுக் கந்தசாமி ஐயர் அவர்களுடனும் மிக நெருக்க மாகப் பழகி அவரின் அன்புக்கும் ஆசிகளுக்குமுரியவராக விளங்கி னார் அவ்வழியே எம்முடனும் நெருங்கிப்பழகி பக்தியுடையவராக விளங்கினார் அவரின் பிரிவானது எமக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

முருகன்மீது அவர் கொண்ட பக்தியானது, பூசகர்களாகிய எம்மீது அவரால் மிகவும் பக்தி செலுத்தும் பண்பை உருவாக்கி யிருந்தது செல்வச்சந்நிதிப் பூசகர் பரம்பரையினர் தனித்துவமானவர் கள் அவர்கள் முருகனின் பரிபூரண ஆசிபெற்றவாகள் அவர்களுக்கும் முருகனுக்கும் வேறுபாடு கிடையாதென்ற பாரம்பரியமான பண்புக் கொள்கையை யுடையவர்.

முருகப்பெருமானின் பக்தி நலச்செறிவால் முழுமையான மனிதராக ஆலயசேவை பொதுசேவை என்பனபுரிந்து மிகவும் உன்னதமான வாழ்வு வாழ்ந்தவர். எல்லோரினதும் அன்புக்கும் மரியாதைக்குமுரியவராகவும் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது ஊராகிய உடுப்பிட்டியில் உள்ள அருள்மிகு பண்டகைப் பிள்ளையார் ஆலயத்தின் நிர்வாகசபைத் தலைவராகப் பல ஆண்டு காலம் பதவிவகித்து அவ்வாலய வளர்ச்சிக்கு அயராதுழைத்த பெருமகனாவார் அத்துடன் தமது ஊரின் நலத்திலும் அக்கறை கொண்டுழைத்த சேவையாளன் என்பது எல்லோரும் அறிந்தவிடயமாகும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்"

எனும் வள்ளுவப்பெருந்தகையின் வாக்குக்கு அமைவாக மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த அமரர் அவர்கள் இன்று விண்ணில் இடம் பெற்றார் என்பது வெள்ளிடை மலையாகும்.

பிறப்பு இறப்பு எனும் வாழ்வின் நியதியில், இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் மனிதர்கள் தாம்செய்யும் புனிதமான பணிகள் அவர்தம் வாழ்வை மேன்மையடையச்செய்கின்றது. இவ்வாறு அமரர் அவர்கள் வையத்துள் வாழும் காலத்தில் வாழ்ந்த சிறப்பான வாழ்வு அவருக்கு மிகவும் உன்னதமான இறப்பைக் கொடுத்திருக்கிறது முருகன் அடியவர்கள் என்றும் மரணிப் பதில்லை அவர்கள் என்றும் செல்வச்சந்நிதியானின் திருப்பாதத் தைச் சரணடைந்து நித்திய பேரானந்த நிலையையடைந்தின் புற்றிருப்பர்.

அவர்தம் பிரிவால் துயருற்றிருக்கும் அன்புத்துணைவியார் ஆருயிர்ச் செல்வங்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் யாபேரினதும் மனக்கவலை மாறவும், அமரர் தம் ஆன்மா பரிபூரண சாந்திபெற்றுய்யவும், எல்லாம் வல்ல எம் குருநாதன் செல்வச்சந்நிதி வேலவனின் பாதாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

செல்வச்சந்நிதிசிவஸ்ரீ. கந்தசாமி ஐயர்
தொண்டமானாறு.உலககுரு நாதஜயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

பிரபலஇன்னிசைச் சொற்பொழிவாளர்

சிவானந்தவாரிதி, சைவமாமணி, இசைஞானதிலகம், வாரியார்வாரிசு, அருள்ஞானவித்தகர், சித்தாந்தவித்தகர், செந்தமிழரசு, அருள்மொழியரசு, வண்டமிழ்வேந்தன், தத்துவமுத்து, சைவத்தமிழிசைவாரிதி, அருளமுதச்சொல்வாரி, வியாசானுக்கிரகவாசகமாமணி, செந்தமிழ்ச்சுரபி, சைவாசாரியசிகாமணி.

## சிவத்திரு.வ.குமாரசாமி ஐயர்

"SIVANANDAVARUTHI"

## SIVATHTHIRU.V.CUMARASAAMI IYER

Mylani,Chunnakam,
Sri Lanka

மயிலணி,சுன்னாகம்,
இலங்கை.
27.08.2013

---

## பேரானந்தப் பெருவாழ்வெய்திய பெருமகனார்

எமது பேரன்புக்கும் பெரும்மதிப்பிற்குரிய அமரர் சிவக்கொழுந்து ஐயா அவர்கள் இறையடிசார்ந்த செய்தியைச் செவியுற்று மன அதிர்ச்சியும் பெரும் மனக்கவலையும் அடைந்துள்ளோம். கிட்டத்தட்ட பதினெட்டு ஆண்டு களுக்கு மேலாக அவருடன் நாம் நெருங்கிப்பழகிய காலங்களில் நடைபெற்ற தெய்வீக நிகழ்வுகள் என்றும் எம் நெஞ்சகத்தை விட்டகலாத பதிவேடுகளாக விளங்குகின்றன. இப்பாரினில் மானுடனாகப் பிறந்த ஒருவனுக்கு இருக்க வேண்டிய அன்பு, கருணை, பக்தி, விடாமுயற்சி, குருமார் அடியவர்களைப் பேணுதல், தன்னலமற்ற சேவை மனப்பான்மை, தற்புகழ்ச்சியை விரும்பாமை, இறைபணி, உறுதியான மனப்பான்மை, அமைதியான சுபாவம், இல்லறக்கடமைகளில் உறுதி இவ்வகையான இன்னோரன்ன சிறந்த நற்குணவியல்புகள் ஒருங்கே வாய்க்கப் பெற்ற உத்தமசீலர். அவரின் குணவியல்புகளை இன்னும் நன்கு விபரிக்கின் ஒரு நூலே எழுதி விடலாம்.

அவருக்கும் எமக்கும் ஏற்பட்ட தெய்வீகத் தொடர்பு முதல் முதலில் எம் குருநாதன் செல்வச் சந்நிதி வேலவனின் திருத்தலத்திலேயே ஏற்பட்டது. அவர் முருகப் பெருமானின் திருவடியை அடைந்த செய்தியையும் எமது குருநாதன் சந்நிதியிலேயே எமது தம்பி சிவஸ்ரீ க. உலககுருநாத ஐயா அவர்கள் மூலம் அறிந்து ஆற்றொணாத் துயரடைந்தோம். அதிர்ச்சி நீங்கப் பல மணித்தியாலங்கள் சென்றன. அவர் எமது சிறிய தந்தையார் சிவஸ்ரீ ச.கந்தசாமி ஐயா அவர்களின் குடும்பத்தவர்களுடன் நீண்ட காலத் தொடர்புடையவர். சந்நிதியான் மீதும் சந்நிதியானை அர்ச்சிக்கின்ற குருமார்கள் மீதும் அளவிறந்த பக்தி கொண்டு விளங்கியவர். அவர்களின் பரிபூரண ஆசிக்குரியவராகவும் மிளிர்ந்தார். செல்வச் சந்நிதி புனித ஷேத்திரத்திலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியான் ஆச்சிரமத் தெய்வீகப் பணிகளில் ஈடுபட்டு அதன் வளர்ச்சிக்கு அயராதுழைத்த பெரு மகனாவார்.

உடுப்பிட்டியில் எழுந்தருளி அருளாட்சிபுரியும் அருள்மிகு பண்டகைப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் மஹோற்சவ காலங்களில் பதினெட்டு ஆண்டுகளுக்கு மேலாக எமை அழைத்து தீர்த்தோற்சவ தினத்தில் எமது தெய்வீக சொற்பொழிவை நிகழ்த்திய பெருமைக்குரியவர். அமரர் அவர்கள் இவ்வாலய நிர்வாக சபையின் தலைவராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்து அவ்வாலய வளர்ச்சிக்கு அயராதுழைத்த பெருந் தொண்டன். எமது அறுபதாவது அகவையில் எம்பெருமான் ஆலயத்தில் எம்மை பாராட்டிக் கௌரவித்தமை இன்றும் எம் மனதில் நீங்காத நினைவைக் கொண்டுள்ளது பண்டகையான் ஆலய வரலாற்றில் அமரர் அவர்கள் ஆற்றிய சேவைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டியவை.

நரை திரை மூப்பு பிணி சாக்காடு எனும் இயற்கையின் நியதிகளை எவராலும் வெல்ல முடியாது. ஆனாலும் மானுடனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மானுட வாழ்வின் நிலையாமையை நன்குணர்ந்து தாம் வாழும் காலத்தில் பக்தியாலும் தெய்விகப் பணிகளாலும் தெய்விக நிலையை அடைந்து மானுடப் பிறவியின் நோக்கத்தை நிறைவு செய்து கொள்ள லாம். இவ்வகை இலக்கணங்களுக்கு அமைவாக வாழ்ந்து தமது வாழ்க்கையைத் தெய்வீகமாக்கி இன்று சிவக்கொழுந்தில் இரண்டறக்கலந்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்றவரே அமரர் அவர்களாவர்.

அமரரின் பிரிவால் பெரிதும் கவலையுற்றிருக்கும் அன்புத் துணைவியார் ஆருயிர்ச்சேய்கள் அன்பு மருமக்கள் பேரப்பிள்ளைகள் உற்றார் உறவினர்கள் அயலவர்கள் அனைவரினதும் மனத்துயர்நீங்கவும் அமரர் அவர்களின் திவ்விய ஆத்மா எம் குருநாதன் செல்வச்சந்நிதி வேலவனின் பாதாரவிந்தங்களில் அர்ச்சிக்கப்பட்ட மலராகவிளங்கிப் பேரானந்தப் பெருவாழ்வு பெறவேண்டு மெனவும் கண்ணீர்மல்க உளமுருகப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

***ஆத்ம சாந்திக்காக உளமாரப் பிரார்த்திக்கும்***
**சிவத்திரு வ. குமாரசாமிஐயர்**

**மயிலனி,**
**சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கலுரை

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

மற்றைய ஜீவராசிகள் எல்லாவற்றிற்கும் ஐந்தறிவுமட்டுமே உள்ளது ஆனால் மனிதனாகிய எமக்குள் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு உள்ளமையே சிறப்பம்சமாகும்.

இப்பகுத்தறிவினை சரியான முறையில் பயன்படுத்தியவர்களே வாழ்ந்த வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ எத்தனிப்பவர்களுமே சாதனையாளர்களாக எம்முன் வாழ்ந்துள்ளனர். நல்ல குணநல இயல்புடனும் தீர்க்க சிந்தனையுடனும் தியாக மனப்பான்மையுடனும் தொண்டு உள்ளத்துடனும் விடாமுயற்சியுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் இனியவராகவும் தாராள மனப்பான்மையும் தாராள சிந்தையுடனும் திரிகரண சுத்தியுடன் பண்டகை பிள்ளையாரின் ஆலயப்பணியே தனது மேலான வாழ்வியற் பணியாக கொண்ட பெருந்தகை சிவத்திரு கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து ஐயா அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார் என்ற செய்திகேட்டு பேரதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம்.

இவர் சகோதரர் உறவினர் அயலவர் இவற்றுக்கு மேலாக கரணவாய் குருக்கள் பகுதியில் வாழக்கூடிய குருக்கள்மார் மீது அளவுகடந்த மதிப்பும் அன்பும் உரிமையும் கொண்டவர் அதே போன்று கரணவாய் குருக்கள் மார் எல்லோரும் அவர்மீது கௌரவமும் அன்பும் கொண்டவர்கள் வல்லபாம்பா சமேத பண்டகை பிள்ளையாரின் திருவருளை கரணவாய் குருக்கள் மாருடை ஆசாரபக்தியாலும் கிரியை பாவனையாலும் தரிசனம் பெற்று வழிபட வேண்டும் என்பதே அவரது அதீத விருப்பம் அதன் நிமிர்த்தம் கரணவாயில் இருக்கக்கூடிய குருக்கள் மாருடைய ஆலோசனைகளையும் பேருதவிகளையும் பெற்று அவர்களால் அண்மைக்காலத்தில் பிள்ளையாருக்கு குடமுழுக்கு பெருவிழா நடத்தி வைத்தவர் தொடர்ந்தும் இவ்வாலயத்துக்கு கரணவாய் குருக்கள் பகுதியில் இருந்து வரக்கூடிய ஒருகுருக்களை நித்திய, நைமித்திய கிரியைக்கு அமர்த்தவேண்டும் என்று அவரது ஆத்மா பிரியும் காலம் வரை மனப்பாடம் பண்ணினார் அவ்வளவு தூரம் கரணவாய் குருமார்களுடன் அன்பாலும் பண்பாலும் இரண்டறக் கலந்தவர்.

அவர் வாழும் காலத்தில் தனது கல்விப் பணியை சிறப்பான முறையில் பயின்று அரசபதவியில் தபாலதிபராக இருந்து நாட்டு மக்களுக்கு சேவையாற்றிய சமகாலத்தில் ஆலயப்பணியையும் ஆன்மீகப்பணியையும் மிகவும் பாங்கான முறையில் ஆற்றினார் ஆலயப்பணியில் அவர் செய்த தொண்டுகளும் சமூகத்துக்கு செய்த தொண்டும் அவர்களது பிள்ளைகள் பேரப்பிள்ளைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் புலத்தினுடாக மலருகிறது மென்மேலும் மலரும்.

இவ்வகையில் அவர்மட்டுமல்ல அவரது பிள்ளைகள் உறவினர்கள் எல்லோரும் கரணவாய் குருக்கள் மார்மீது அன்பும் பணிவான மதிப்பும் கொண்டவர்கள் இவ்வாறாக தனது பிள்ளை களை பண்பாக வளர்த்து வழிப்படுத்தி வீட்டிற்கும் நாட்டிற்கும் சிவாலயங்களுக்கும் தொண்டாற்றிய பெருந்தகை இறைவனடி சேர்ந்தாலும் அவரது சேவையும் தொண்டும் என்றும் எல்லோ ராலும் பேசப்படும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறான பெருந்தகை அமரர் கதிரிப்பிள்ளை சிவக் கொழுந்து ஐயா அவர்களது ஆத்மா வித்தக விநாயக விரைகழல் சரணடைய நாம் எல்லோரும் பிரார்த்திப்பதோடு அன்னாரின் மனைவி பிள்ளைகள், உறவினர்கள் யாபேர்க்கும் எங்களது இதயம் நெகிழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

கரணவாய் குருக்கள்மார் சார்பாகவும் குறிப்பாக ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாதக்குருக்கள் குடும்பத்தினர் சார்பாகவும் இவ்விரங்கல் செய்தியை சமர்ப்பிக்கின்றோம்.

சுபம்.

இப்படிக்கு

ஸ்ரீலஸ்ரீ வி. செவ்வந்திநாதக்குருக்கள்

(ஆசிரியர். யா/உடுப்பிட்டு அமெரிக்கன் மிஷன் கல்லு/ரி.

உதவிக் குருக்கள் –

கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வ.ஆ. தங்கமயில் தரும் செய்தி

"செய்வன திருந்தச் செய்"

என்பதில் அமரர் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து மிக இறுக்கமானவர். அது எனக்குப் பிடித்த ஒன்று.

"உய்வன அவன் அருள் மழையால்"

என்பதிலும் அதே அடக்கத்தைக் கொண்டவர். அதுவும் எனக்குப் பிடித்ததே. இதனால் நான் கண்டு கொண்டது

* எம்மில் ஒன்றும் இல்லை
* எம்மால் ஒன்றும் இல்லை
* எம் எதிர்பார்ப்பும் ஒன்றும் இல்லை
* நான் இங்கு எதுவும் செய்ததில்லை
* அவன் விருப்பின்றி எதுவுமில்லை

எனும் சமூக உளவியல், திவ்ய ஒருங்கிணைவு அவர் எமக்குக் காட்டிய புகட்டிய பாடம் என்பதால் அதற்கும் அவர்க்கும் என்றும் நன்றி உடையோம். அவரின் குடும்பத்தார் சாந்தி உறுவதாக.

இவண்,
அன்புடன்
வ.ஆ. தங்கமயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டி உப தபால் அலுவலகம் திறப்புவிழா



2000 ஆம் ஆண்டு ஞானச்சுடர் வெளியீட்டின்போது து. வைத்திலிங்கம் அவர்களால் வழங்கப்பட்ட சிறப்புப்பிரதி ஒன்றினை பெற்றுக்கொள்ளும் நிகழ்வில் சைவப்புலவர் செல்வி க. சசிலேகா அவர்கள் பெற்றுக் கொள்வதையும் அருகிலே பேரவை உறுப்பினர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் மனதில் நீங்கா...

அமரத்துவம் அடைந்த திரு. கதிரிப்பிள்ளை சிவக் கொழுந்து அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு தன்னாலான பங்களிப்பை வழங்கியதோடு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையை உருவாக்கு வதற்கும் மூல காரணமாக விளங்கியதோடு பல அன்பர்களையும் இணைத்து பேரவையை வழிப்படுத்தியவர்களில் முதன்மையாக விளங்கியவர். அதற்கமைவாக நிர்வாக உறுப்பினராக இருந்து படிப்படியாக உப தலைவராக விளங்கி பேரவையின் செயற் பாட்டிற்கு ஊன்றுகோலாக விளங்கி தனது பணியினை செம்மை யாக நிறைவேற்றிய ஓர் பெருந்தகையாளர். அன்னாரின் மறைவா னது ஆச்சிரமத்திற்கும் பேரவைக்கும் ஓர் ஈடில்லாத இழப்பாக அமைந்ததோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதா பத்தைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வேற்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

.சந்நிதியான் ஆச்சிரம
சைவகலை பண்பாட்டுப் பேரவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம்
# அறநெறிப் பாடசாலை
# வழங்கிய இரங்கலுரை

சிவத்தொண்டர் அமரர் சிவக்கொழுந்து அவர்களின் மறைவைப் பத்திரிகைமூலமாக அறிந்து துயருற்றோம். அவரின் மறைவு அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் மட்டுமன்றி, அவருடன் பழகிய அனைவருக்கும் துயர் தரும் நிகழ்வாகும். 30 ஆண்டுகளுக்கு முன்பு கொழும்பில் கடமை யாற்றிய சமயம் எமது சங்க வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர்.

அவர் தன் இனம், தன் சமயம், தன் மொழி என்ற பற்றுதலுடன் சமூக நலனில் அக்கறை கொண்டவர்.

"வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின்" தலைவ ராகவும், செயலாளராகவும், சங்க வளர்ச்சிக்காக பாடுபட்டவர். எவருடனும் இனிமையாக, பணிவாக, பண்பாக பழகியவர். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி சென்றாலும் சங்கத்தை மறக்காதவர்.

தோற்றம் உண்டேல் மறைவும் உண்டு
பிறப்பு பிறந்தவரை அழவைக்கும்
இறப்பு பிறரை அழவைக்கும் இது இயற்கையின் நியதி. அவர் உடம்பு அழிந்தாலும் அவர் செய்த சேவைகள். வாழ்ந்த முறை, அவர் பெயர், புகழ் என்றும் அழியாமல் எல்லோர் மனதிலும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

அன்னாரது ஆத்மா இறைவன் திருவடியில் அமைதியுற பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

S.P. சாமி
தலைவர், வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம்
மற்றும் சங்க அங்கத்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனார் திருப்பாதத்தில் இன்று சிவக்கொழுந்தர்

பெயருக்கேற்ற பாத்திரம்! பாத்திரத்திற்கேற்ற பெயருடையோன்! என்றும் எமதுள்ளம் நிறை மனித நேயமிக்கோர் ; மனிதப் பண்பினன் ; அவரே, மெய்ப்பொருள் தன்னை விழித்துக் கண்ட உடுப்பிட்டியூர் அமரர் ஸ்ரீமான் கதிரிப்பிள்ளை சிவக் கொழுந்து ஆவர். அமரர் பிரதம தபாலதிபராய் நாட்டின் பல பாகங்களில் கீர்த்தியுடன் பணியாற்றிய பண்பாளன்; அகில தீவின் சமாதான நீதிவானாக மக்களின் பெருமதிப்பினைப் பெற்ற பேற்றுடையோன்.

என்றும், எங்கும், எதிலும் நன்றே செயலாற்றிய நல்லவர்; வல்லவர். அரசபணியுடன் பொதுப்பணியிலும் தன் தனித்துவமான முத்திரையைப் பதித்த கனதியானதோர் பாத்திரம்... ஆத்மீகப்பணியில், திரிகரண சுத்தியுடன் ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்திலும் தம் குடும்ப ஆலயமாம் ஸ்ரீ பண்டகைப்பிள்ளையார் கோவிலிலும் அவர் ஆற்றிய பெரும் பணிகளை அறிவார் அறிவாரே. பலரும் போற்றிய பரமபக்தன். மேலும், அமரற்குரிய சிறப்பினை, ஆற்றலைக் கூறும் திறன் என் பேனாவிற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சகோதரன், தபாலதிபர், ஒருவரின் நெருங்கிய அன்பர். அமரரின் பாரியார், அவர்தம் பிள்ளைகளை நன்கு அறிவேன். இன்று அமெரிக்காவில் பொறியியலாளராக கடமை யாற்றும் அமரரின் ஏகபுத்திரன் திரு. புவனகுமார் என்றும் எம் பெருமைக்குரியவர். ஒரு சற்குணன்; தந்தையின் புகழ் துலங்க வாழும் மைந்தன்.

அமரர் ஸ்ரீமான் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து மறைந்தும் மறையாது எம்மிடை வாழ்ந்து கொண்டே, இறப்பிறப்பற்ற நிலையில் என்றும் விளங்குவர். அமரரின் விண்ணக வாழ்வு சிறப்புற, வேதக் கூற்றினை நினைந்து அவர் தம் பாரியார், பிள்ளைகள், சுற்றம் சூழ நாமும் திரிகரணசுத்தியுடன் பிரார்த்தித்து சாந்தி பெறுவோமாக!

சிவனார் அடியில் சிவப்பேறு பெற்ற பெரியார் ஸ்ரீ சிவக்கொழுந்தர் எல்லையில்லாப் பேரின்பத்தில் வாழ்க, வாழ்கவென வேண்டி அமைவோமாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

த.ந. பஞ்சாட்சரம்,
ஆசிரியன், நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைக்கு ஓர் வித்து மட்டுமல்ல முத்துங்கூட
## மறக்கமுடியாதவர் அமரர் திரு. சிவக்கொழுந்து J.P

அமரர் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து அவர்கள் இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்தமை அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரும் அடைகின்றேன். இவர் தமது காலத்தில் எம்மோடு அன்புடன் பழகிய பண்பும் இவரது சாதனைகளும் எனது மனதை வெகுவாக ஈர்ந்து இவர் சிலாபத்தில் பிரதம தபாலதிபராக இருந்து எல்லோர் மனதிலும் இடம்பிடித்த பண்பாளன் பண்டகை பிள்ளையார் ஆலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்து ஆலய வளர்ச்சிக்கு முன்னின்று உழைக்கும் பேரருளாளன் விநாயகர் மீது மிகுந்த பக்தி கொண்டவர் இதனாலேயே அருள்நிரம்பபெறும் திருவிழாவின் மூன்றாம் நாளே வேழமுகத்தானோடு இணைந்து விட்டார்.

எப்படியும் வாழலாம் என்றில்லாது இப்படித் தான் வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர் அமரர் சிவக்கொழுந்து ஐயா அவர்கள்

தான் வாழ்ந்த சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் பிற்போக்கு வாதங்களை சமூக ஏற்றத்தாழ்வுகளை வெறுத்து ஒதுக்குபவர் உண்மையான மனிதநேயம் உள்ளவராக ஒருவரோடு ஒருவர் உறவு வைத்துக் கொள்பவர் எல்லோருடனும் சமமாகப் பழகும் தன்மையால் இவர் ஒரு அகில இலங்கைக்கான சமாதான நீதவானாகவும் விளங்கினார். இவருடைய நட்பு, அவர் சார்ந்த நடத்தைக்கோலங்கள் என்றும் மறக்க முடியாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்நிறைந்த மனைவி, கண்நிறைந்த மக்கட்செல்வங்கள் பெற்றெடுத்து வாழ்காலத்தில் எல்லோருக்கும் உதவுபவனாக இருந்து எல்லோரையும் வாழவழிவகுத்த ஐயா சிவக்கொழுந்து அவர்கள் நட்பின் சிகரமாய் பண்பின் உறைவிடம் என்றென்றும் எமது நெஞ்சில் நிறைந்து நிற்கின்றார்.

மழைக்கால வெயிற்போதில் வர்ணஜாலமிடும் வானவில் போன்றது வாழ்க்கை. வாழ்க்கை நிலையில்லாதது "நெருநல் உள்ளொருவன் இன்றில்லை எனும் பெருமையினை உலகமும் நிலைநிறுத்திக் கொண்டே இருக்கின்றது

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

இப்படிப்பெருமைபெற்று வாழ்ந்தவர், வாழுகின்றவர் நம்மில் எத்தனை பேருண்டு. பிறந்தோம் வாழ்ந்தோம் மறைந்தோம் என்று கூற நின்றவர் தானே கோடி.

அந்தவகையிலே அமரர் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து அவர்கள் வாழ்ந்து காட்டியுள்ளார். [illegible] மக்களுக்கு மட்டுமல்ல தெய்வம் உறையும் ஆலயங்களுக்குக்கூட பல தொண்டுகள் செய்துள்ளார். மனித நேயம் குறைந்துவரும் இந்நாளில் நட்புக்கு இலக்கணமாகி நேசத்தால் நிறைந்த எங்கள் சகோதரர் அந்த நல்ல உள்ளம் படைத்த நல் அறிவாளர் இன்று எம்மிடையே இல்லை என நினைத்து உள்ளம் துடிக்கின்றது தேவர்களும் தம் உலகிற்கு அன்னாரின் தூயபணி வேண்டி அழைத்துச் சென்றனரோ? மண்ணுலகில் மட்டுமன்றி விண்ணுலகிலும் அன்னாரின் மேலானபணி தொடரட்டும்

அமரர் சிவக்கொழுந்து அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை யும், இலட்சியங்களையும் அவரது பிள்ளைச் செல்வங்கள் நிறைவேற்றவும் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அவர்தம் குடும்ப ஆறுதல் அடையவும் எல்லாம்வல்ல பண்டகை விநாயகர் அருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்த சாந்தி

"சேயோன் பதி"
விராச்சி
உடுப்பிட்டி

சிதம்பரப்பிள்ளை சண்முகம் (J.P)
(ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுக்களஞ்சியம்

பொதுவான அடிப்படையில் நாம் நோக்கும் போது ஒவ்வோர் மனிதனிடத்திலும் ஒவ்வோர் திறமை அமைந்திருப்பதைக் காணலாம். இவர்கள் யாவரும் தாம் சார்ந்த குறிப்பிட்ட ஒரு துறையில் மட்டும் பிரபல்யமடைவதை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. உதாரணமாக அரச உத்தியோகம், அரசியல், ஆன்மீகம், சமூகசேவை, வர்த்தகத்துறை போன்ற பல்வேறு துறைகளில் ஏதாவதொன்றில் மட்டும் பிரபல்யமடைகின்றனர். ஆனால் இவர்களை விஞ்சி மேற்கூறப்பட்ட சகல துறைகளிலும் சரளமான அறிவும், அத்துறைகளில் ஈடுபாடுடையவராக இருந்தமையால் அத்துறைசார்ந்த அனுபவமுதிர்ச்சியுமே காரணமாகவும் அமைகின்றன. இத்தகைய பல்துறைசார் அறிஞர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் தான் அண்மையில் இறைபதம் அடைந்த அமரர் க. சிவக்கொழுந்து ஆவார். இங்கு யான் குறிப் பிட்ட இரண்டாம் வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் யாவரும் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்தவர்கள். அவர்களுள் ஒருவராக வாழ்ந்து அறிவுக்களஞ்சியமாகப் பிரபல்யமடைந்து நம் ஊருக்குப் பெருமை சேர்த்தவர்களுள் அமரரும் ஒருவராவர்.

அன்னார் அரசசேவை, அரசியல், ஆன்மீகம், சமூக சேவை, மும்மொழித் திறமை(தமிழ், ஆங்கிலம், சிங்களம்) ஆகிய மொழிகளில் சரளமான அறிவும் பெற்றிருந்தார். குறிப்பாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்போனால் இவர் தடம் பதிக்காத துறையே இல்லை என லாம். இத் துறைகளில் இளவயது முதல் ஈடுபாடு கொண்டமை யால் இவருக்கு ஏற்பட்ட அறிவு முதிர்வும், ஆழ்ந்த அனுபவ முமே இவரை ஒரு அறிவுக் களஞ்சியமாக மாற்றியது. இவர் பெறு மதி மிக்க பல்வேறு துறைசார்ந்த அறிவினையும், அத்துறையில் அவருக்கு ஏற்பட்ட அனுபவ முதிர்ச்சியுமே இவரை அத் துறைகளின் செயற்பாடுகளைச் செவ்வனே மற்றெல்லோரையும் விடச் சிறப்பாக வழிநடத்தப் பயன்பட்டது என்றால் மிகையா காது. எனவே இத்தகையோரின் உள்ளத்தை அறிவுக் களஞ்சியம் என்றே கூறலாம்.

அன்னாரின் சேவைகளைப் பற்றி எழுதப் போகும் நினைவஞ்சலி மலர் கொடிபோல் பற்றிப் படர்ந்த பெருங் கொடியாகும். அதனால் அவற்றுள் ஒரு சிலவற்றை நினைவு கூர்ந்தால் சாலச் சிறந்ததென யான் கருதுகிறேன்.

அமரர் அரச சேவையின் பொருட்டு ஆரம்பகாலத்தில் கொழும்பில் கடமையாற்றிக்கொண்டிருந்தார். இக் காலகட்டத் தில் வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத் தலைவராகும் வாய்ப்பு அன்னாருக்குக் கிடைத்தது. இவர் நுண்ணிய கருமமாயினும் எண்ணித் துணியும் மனப்பான்மையுள்ளவர். இதன் பொருட்டு இவரின் சமூகசேவைக்கான கன்னி முயற்சிக்கென போட்டுக் கொண்ட பிள்ளையார் சுழி எனக் கருதப்படும் இந்துமா மன்ற காணி பெற்றுக்கொண்டமையே இவரின் ஆரம்பப்பணி என்பத னையும் ஈண்டு குறிப்பிடுகிறேன். இச் செய்தியினை எனக்குத் தெரிவித்த அவரின் நண்பர் கூறுவார் அமரரின் விடா முயற்சியும் சோர்விலா மனமுமே இக் கைங்கரியத்தின் வெற்றிக்குக் காரண மாக அமைந்தது என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய சமயசேவையின் மைல் கல்லாக அமைந்தது இவரின் குலதெய்வமாகிய பண்டைகைப்பிள்ளையார் ஆலயமாகும். நான் சிறுவனாக இருக்கும்போது அன்னார் கொழும்பில் கடமையாற்றினார். அந்தக் காலகட்டத்தில் கடுகதிப் புகை யிரத சேவை எதுவுமே யாழ்ப்பாணத்திற்கு இல்லாத காலம். இரவு தபால் புகையிரத சேவை மட்டுமே இருந்தது. அன்னார் மேற் குறித்த ஆலயத்திற்கு எமது வீட்டுக்கு முன்பால் அமைந்திருக்கும் வழி மூலம் கோவிலுக்குச் செல்வார். புகையிரதத்திலிருந்து கொழும்பால் வந்த களைப்பினையும் பொருட்படுத்தாது அவர் முதற் செய்யும் பணி பிள்ளையார் தரிசனம் என்பதை ஈண்டு குறிப்பிடுகிறேன். இதன் மூலம் நாம் உணர்வது இவர் தம் குலதெய்வமாகிய பண்டைகைப் பிள்ளையார் மீது கொண்ட இறை அன்பும், பக்தியுமேயாகும். இவ்வளவோடு நின்றுவிடாமல் ஆலய வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு **1977**ஆம் ஆண்டளவில் ஆலயத்திற்கென ஒரு நிர்வாக சபையினை நிறுவினார். ஆரம்பகாலத்தில் அதன் செயலாளராக இருந்து ஆலயத்திற்கான நிர்மாணப் பணிகளைச் சிறப்புற நடத்தி எம் கிராமத்திலுள்ள சிறப்பு மிக்க ஆலயங்களுள் ஒன்றாக மிளிர வைத்தார். அதோடுமட்டுமல்லாமல் இவ் ஆலயம் நித்திய, நைமித்தியக்கிரியைகள். மகோற்சவம் போன்றவை சிறப்பாக அமைவதற்கு வித்திட்ட பெருமையும் இவரையே சாரும். இதன் மூலமும் உற்சவகாலங்களில் சமய சம்பந்தப் பட்ட ஆன்மீகப் பேருரைகள் மூலமும் சமய வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியுள் ளார். இவை மட்டுமல்லாமல் உடுப்பிட்டி வீரபத்திரர் ஆலய நிர்வாக சபையிலும் ஆரம்பகால சபை உறுப்பினராகப் பணியாற்றினார். மேலும் சந்நிதி முருகன் ஆலய கலை பண்பாட்டுக் கழகத்திலும் பொறுப்பான பதவியினை வகித்து அதனையும் சிறப்புற வழிநடத்தியதன் மூலம் அன்னாரின் சமயப் பற்றினையும், சமய சேவையினையும் நாம் உணரக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எமது கிராமத்தின் வளர்ச்சியின் அங்கங்களாக விளங்கும் கூட்டுறவுத்துறை, நலன்புரிச் சங்கம் போன்ற பல்வேறு பட்ட சமூக அபிவிருத்தி நிறுவனங்கள் யாவற்றிலும் உறுப்பின ராக இருந்ததோடு மட்டுமல்லாது அவற்றின் வளர்ச்சிக்கும், சேவைக்குமான ஆலோசகராகவும் இருந்து வழிநடாத்தினார் என்றால் மிகையாகாது.

இத்தகைய பல்துறைசார்ந்த அறிவு, அனுபவம் முதிர்ந்த அறிஞராக வாழ்ந்து எமக்கெல்லாம் தம் உள்ளத்தில் தேக்கிவைத் திருந்த பல்துறை சார்ந்த அறிவாற்றல், அனுபவங்கள் யாவற்றை யும் எங்கள் கிராம மக்களுக்குத் தேவைப்படும் போது வழங்கிய வர். இத்தகைய அறிஞரின் உள்ளம் அறிவுக் களஞ்சியத்துக் கொப் பாகும். அன்னாரின் மறைவு அவர் குடும்பத்துக்கு மட்டுமல்லா மல் அவரைச் சார்ந்திருந்த கிராம மக்கள் அனைவருக்குமே ஓர் பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவர் குடும்பத்தினருக் கும். ஏனையோருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக் கின்றேன். அவர் தொண்டாற்றி, தொழுது அவன் கழலே தஞ்சமென எண்ணி இறுதிவரை வாழ்ந்த அமரருக்கு ஔவைக்குக் கைலாயம் காட்டிய ஆனைமுகப் பெருமானால் பேரின்பப் பெருவாழ்வு கிட்டவேண்டுமென்று பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சி. விக்னேஸ்வர ஐயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவத்திரு சிவக்கொழுந்தைய!

1. சொல்லுகதி ரிப்பிள்ளை பெற்று எடுத்த
சோர்விலான் பேராசான் சிவக் கொழுந்து
நல்லவன் காண் கற்றவன்காண் அன்பின் ஊற்று
நானிலத்து மக்களெல்லாம் போற்று கின்ற
வல்லவன்காண் வண்மையுறு வாய்மை மிக்கான்
இரப்பவர்க்கு பொருள் உதவி அறிவு மூட்டி
தொல்லையது சூழ்ந்திட்ட போதும் அன்னான்
துவளாது அறவழியில் நின்ற மேலோன்.

2. நாலுபத்து ஆண்டாக அஞ்சல் சேவை
நலமான சேவை செய்த கடமை வீரன்
ஏலுமட்டும் மக்களது சேவை தன்னை
இறைவனது சேவையெனக் கருதி அன்னான்
கால மெல்லாம் பணிசெய்து மேன்மை கொண்ட
கண்ணியவான கடமைதனைச் செய்யும் வீரன்
சாகும் வரை சான்றாண்மை காத்த மேலோன்
சால்புடைய உலகம்இதை மறக்கா தென்றும்.

3. ஏறுமயில் வாகனனை ஏற்றி நெஞ்சில்
எப்போதும் அவன்புகழைப் பாடும் மேலோன்
மீறுகின்ற சினம் அடக்கி அன்பு கொண்டு
மேன்மையுற நாட்டவர் மெச்சும் வண்ணம்
வேறுஎந்த தீமைதன்னும் விரும்பா நெஞ்சன்
வினையறுத்து மேன்மைதனை செய்யும் மேலோன்
தாறுஅணியும் முடியுடைய முருகன் மேன்மை
தாரணியோர் மகிழ்ந்திடவே சொல்வான் அன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தக்கார் நீரென்றறிய விட்டுச் சென்ற
தானங்கள் திருப்பணிகள் மறக்கப் போமோ!
இக்காலம் மதத்திற்காய் நாட்டிற் காக
இயற்றிநின் தொண்டினையே யார்தான் செய்வார்?
பொற்காலம் போனதென உலகம் கூறும்
பொன்மகனே நின் ஆன்மா சாந்தி கொள்க!
எக்காலும் நின்சேவை இங்கி ருக்கும்
ஏற்றமுள்ளோய் இறந்தாலும் இறந்தா யல்ல.

5. யாதுமே ஊரென்ற கொள்கை யோடு
யாவருமே கேளிர்என்ற நடத்தை யோடு
ஆவதெல்லாம் பிறராலே வருவ தன்று
அவ்வாறு கொள்கையுடன் இருந்த மேன்மை
மேவுபுகழ் வள்ளுவரின் கொள்கையோடு
மிகையாக வாழ்ந்தவர்நீர் உலகம் சொல்லும்
சாவதுதான் வந்திட்ட போதும் தாங்கள்
சாற்றீனீர் திருப்பணியை முடிக்க வேண்டி.

6. அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம்
அத்தோடு வாய்மையுமாய் எல்லாம் கூடி
இன்பமிகு சாண்றாண்மை இசைந்த மேலோய்
இரப்பவர்க்கு இயன்றவரை அன்பு செய்தாய்
துன்புற்று ஆற்றாது அழுத கண்ணீர்
துடைத்தெறிந்தீர் எவர்க்குமே பேதமின்றி
நன்றுசெய்தீர் நன்கு செய்தீர் இயம்பற் பாலோ!
நாணடைவீர் சிறுதவறு நடந்த காலை.

7. தொலையல்லார் கண்ணுமே தவறை ஏற்கும்
தொன்மைசேர் சால்புடமை கட்டளைக்கல்
நிலையென்று கொண்டவன்நீ பதறா நெஞ்சம்
நீள்பெருமை வள்ளுவனைப் படித்த மேலோய்
இலையிந்த உலகினிலே திருக்குறள் போல்
என்றெல்லாம் மக்களுக்கு அருமை கூறும்
மலையளவு புகழ்படைத்தோய் உந்தன் மேன்மை
மாண்பதனைப் பகர்வதென் முடியா; தைய!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஐயநீர் ஆற்றியநற் பணிகட் கெல்லாம்
அரியவொரு கைம்மாறு செய்யப் போமோ?
மெய்யாக நமக்கெல்லாம் மழை யாய் வந்து
மேன்மைபெறச் செய்தமுகிற் கூட்டம் தன்னை
வையகத்தார் போற்றின ரோ வாழ்த்தி னரோ?
வான்மழைதான் வாழ்த்து என்று கேட்ட துண்டோ?
மெய்யாக மேன்மக்கள் பயன் கருதி
விளம்பரத்தின் பொருட் டெதுவும் செய்ய மாட்டார்

9. புலமைசார் பண்பாடு இதுதான் என்று
புவியினிற்கோர் கட்டளைக் கல்லே யாகி
வலம்வந்த நற்பெரியீர் வணக்கம் செய்தோம்
வான்மழைபோல் எமக்கெல்லாம் செய்த நன்மை
புலம்பெயர வந்திடினும் அன்றி யேனும்
பூவுலகில் மறப்பதுண்டு மேன்மை மிக்காய்
கலங்குகிறோம் நின்பிரிவால் ஐய இங்கே
கனித்தமிழே! மீண்டும் உனைக் காண்ப தெப்போ?

10. ஊரான்வோர் ஒன்றாக கூடி நின்பால்
உணர்ச்சி பொங்க, பலநூறு மாலை தன்னை
தாராள மனத்துடனே தரித்தார் நின்பால்
தண்ணொளியோய்! நின்பெருமை பேசப் போமோ?
காய்ந்துவிழு மலர்தன்னில் விருப்பம் இல்லேன்
கருத்தினிக்கும் வாடாத மாலை சூட
ஆய்ந்து தமிழ் முருகு எழில்பாடல் தன்னை
அன்புடையீர் அழுதுனது பாதம் வைத்தேன்.

பண்டகைப்பிள்ளையார் அடியவன்
என்.கே. எஸ். கிருஷ்ணபிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சிவக்கொழுந்து
# J.P C.P.M

உயர்ந்த பண்பாடும் சிறந்த ஆளுமையும் உடையவரான அமரர் சிவக்கொழுந்து என் நீண்ட கால நண்பர். நான் காங்கேசன்துறை தபால் அதிபராக கடமை ஆற்றிய காலம் தொடக்கம் அவருடன் நெருக்கமாக உறவாடும் வாய்ப்புக் கிட்டியது.

*1987* ஆம் ஆண்டு "Opuation Libetation" இராணுவ நடவடிக்கையினால் இடப்பெயர்வுக்கும் பாதிப்புக்கும் உள்ளானோம். அப்போது அவர் வசாவிளான் வீதியில் இருந்த அச்சுவேலி தபாலகத்தில் வேலை செய்தார். இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த கந்தோரை அவரது விடா முயற்சியால் வல்வை வீதியில் ஒரு கட்டிடத்தில் மாகாண தபால் அத்தியட்சகர் உதவியுடன் மக்கள் சேவைக்காகத் திறந்து வைத்த பெருமை அவரைச்சாரும். இப்போதும் அக் கட்டிடத்தில்தான் தபாலகம் இயங்குகின்றது.

அவர் பண்டகைப்பிள்ளையார் கோவிலில் பரிபாலன சபைத் தலைவராக இருந்து சேவையாற்றியவர். அக் கோவில் கொடியேற்றத்தின்போது ஒவ்வொரு வருடமும் அழைப்பிதழ் தருவார். நானும் தவறாது சென்று பிள்ளையாரைச் சேவித்து வருவேன். துவாளிப் பிள்ளையார் கொடியேற்றத்திற்கு சிவக்கொழுந்துவும் வந்து வழிபடுவார். அமைதியான நல்ல மனிதர் இன்று நம்மிடையே இல்லை.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சு. திருப்பரங்கிரிநாதன்,
இளைப்பாறிய தபால் அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனி அமுதம் போன்று இனிய குணநலம் படைத்த அமரர் சிவக்கொழுந்து அவர்கள்

காட்சிக்கு எளியனாகவும் கடுஞ்சொல்லன் அல்லாத வராகவும் விளங்கிய அமரர் சிவக்கொழுந்து ஐயா அவர்கள் எனது இனிய அன்பர்களுள் ஒருவர். கனியமுதம் போன்று இனிய குணநலம் படைத்தவர். தனது சக்திக்கு எட்டிய வரையில் சைவமும் தமிழும் தளைத்து இனிதோங்கப்பாடுபட்டவர். தபால் இலாகாவின் முன்னாள் முதல்தர அதிபராக விளங்கியவர். அவர் ஓர் அகில இலங்கை சமாதான நீதவானும் ஆவார்.

அன்னார் வாழ்ந்த காலப்பகுதியில் சைவத்திற்கும், தமிழுக்கும், கல்வித்துறைக்கும், கூட்டுறவுத்துறைக்கும், அரசியலுக்கும் தன் சக்திக்கு எட்டியவரையில் தொண்டாற்றிய வர்.

உடுப்பிட்டி பண்டகைப்பிள்ளையார் கோயிலின் பரிபாலன சபையில் தொடர்ச்சியாகத் தலைவராக இருந்து கோயிலின் வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற் காகவும் பாடுபட்டவர். துர்க்கா துரந்தரி அமரர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை அமரரும் நானும் ஒருமுறை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அமரர் சிவக்கொழுந்து ஐயா துர்க்கா துரந்தரியை நோக்கி அம்மா நீங்கள் ஆண்டுதோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்து கின்ற தெய்வீகப் பேருரையை இம்முறையும் எங்களு டைய பண்டகைப்பிள்ளையார் கோவிலில் நிகழ்த்த வேண்டும் என்று கேட்டார். அதற்கு அம்மையார் போக்குவரத்துக் கஷ்டம் இருப்பதால் இம்முறை எனது இடத்துக்கு வேறு ஒருவரைப் பேருரை நிகழ்த்த ஒழுங்கு செய்யுங்கள் என்றார். அதற்கு அமரர் இக்குடாநாட்டிலே எத்தனையோ பெரிய கோயில்கள் இருந்த போதும் மகோற்சவ காலங்களில் தெய்வீகப் பேருரைகள் நிகழ் வது இல்லை. ஆனால் எங்களுடைய கோயிலோ சிறிய கோயி லாக இருந்தாலும் மகோற்சவ காலங்களில் தெய்வீகப் பேருரைகள் நிகழ்வதனால் சைவத்தையும் தமிழையும் ஓரளவுக்காவது வளர்க்க முடிகின்றது. எனவே தவறாமல் வாருங்கள் அம்மா என்றார். அம்மையாரும் சிரித்துக்கொண்டு வருகின்றேன் என்றார். பின்னர் வந்து பேருரையையும் நிகழ்த்தினார்.

உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் தொகை போதுமானது இல்லை என்ற காரணம் காட்டி கல்வி இலாகா பாடசாலையை மூட எத்தனித்தபோது திருவாளர் சந்திரமூர்த்தியுடன் சேர்ந்து வீடு வீடாகச் சென்று பெற்றோருடன் கதைத்து பிள்ளைகளைச் சேர்த்து பாடசாலையை மூட விடாமல் பெரும்பணி ஆற்றியவர். இப் பாடசாலையின் நிறுவுனர் விழாவின்போது நிறுவுனர் உரையை மிக சிறப்பாக நிகழ்த்தினார். அன்னாருக்கு அன்று அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மாலை அணிவித்து ஊர்வல மாக மேடைவரை அழைத்துச் சென்றனர். அன்னார் அன்று உரை நிகழ்த்திய மேடையை விட்டு இறங்கியதும் “மிகவும் சிறப்பாக உரை நிகழ்த்தினீர்கள்” என்று நான் பாராட்டிய போது அவர் முகம் புன்னகையால் பூரித்த காட்சி இன்றும் என் மனக்கண்முன் காட்சியளிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டி ப.நோ. கூ. சங்கத்தின் மத்திய கிளை இலக்கம் 22இன் நிரந்தரக் கட்டிடம் அமைவதற்கு வித்திட்ட இருவருள் அன்னாரும் ஒருவர். இன்று இக்கிளை "Coop City" கூட்டுறவு நகர்க் கிளையாக உயர்வு பெற்றுள்ளது.

அமரர் அரசியலில் இலைமறை காய்போன்று செயற்பட்டு இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் எந்த மூலை முடுக்குகளிலும் ஒரு தமிழன் வாழ்ந்தாலும் அவன் இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தவர்களைப் போன்று அரசியல் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், வாக்களிக்கும் சுதந்திரம், குடியுரிமைச் சுதந்திரம் போன்ற உரிமைகளை அனுபவிக்க உரித்து உடையவன் என்ற சரத்து 29 ஐப் பெற்றுத் தந்த பழம் பெரும் அரசியல் கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்.

இவ்வாறு மேற்கூறப்பட்ட துறைகளில் அரும்பெரும் தொண்டாற்றிய அமரர் சிவக்கொழுந்து ஐயாவின் மறைவினால் துயருறும் வாழ்க்கைத் துணைவியாருக்கும், பிள்ளைகளுக்கும். குழந்தைகளுக்கும், உற்றார், உறவினர்களுக்கும், ஏனையோருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாருண்டைய ஆத்மா சாந்தியடைவதற்கும் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

செல்லப்பா சோமசுந்தரம் J.P
ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்,
பகவதி அம்மன் கோயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பனை மறக்கலாமா....

ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன்பு அரச பணி காரணமாக அச்சுவேலி வைத்தியசாலையின் அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்தில் நான் கலந்துகொண்டபோது அக் கூட்டத்தில் ஆவரங்கால் சிவன் ஆலய பரிபாலனசபைத் தலைவர் அமரர் சோமசுந்தரம் எனக்கு அருகில் இருந்தார். அவருக்குப் பக்கத்தில் இருந்த அமரர் சிவக்கொழுந்தை எனக்கு அறிமுகம் செய்து "இவர் அச்சுவேலி தபால்கந்தோர் பிரதம அதிபர்" என எனக்குக் கூறி அத்துடன் இவரும் உங்கள் கிராமமாகிய உடுப்பிட்டியைச் சேர்ந்தவரென அறிமுகப்படுத்தினார். அன்று தொடக்கம் எனக்கும் அமரருக்கும் தொடர்பு ஏற்பட்டு பின்பு படிப்படியாக எமது ஊர் விடயங்கள் சம்பந்தமாகவும் வேறு வழிகளிலும் எனக்கும் அவருக்கும் ஓர் அன்னியோன்னிய உறவு ஏற்பட்டது. தவிரவும் அமரர் சின்னத்தம்பி குமாரசாமியின் நெருங்கிய உறவினர் எனவும் நான் தெரிந்து கொண்டேன். பின்பு பணி மாற்றம் சம்பந்தமாக அமரர் சிலாபம் போன்ற இடங்களுக்கு மாற்றலாகி ஒய்வு பெற்றபின்பு உடுப்பிட்டிக்கு திரும்பியதும் எமது உறவு மேலும் அந்நியோன்யப்பட்டது. எமது உறவு நண்பன், சிநேகிதன் என்றதிற்கப்பால் ஒரு சகோதரனும் குடும்பம் என்ற நிலையில் வளர்ந்தது.

பண்டகைப் பிள்ளையார் கோவில் பரிபாலன சபையின் தலைவரென்ற முறையில் அவரும் உடுப்பிட்டி சனசமூக நிலைய தலைவரென்ற முறையிலும் மற்றும் சில பொது நிகழ்வுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டமாக இருந்த எனக்கும் உறவு வளர்ந்து வந்தது. அவருடன் நெருங்கிப் பழகிய விதத்தில் அவரை ஒரு நடமாடும் பல்கலைக் கழகம் என கூறுவதை சிலர் மிகைப்படுத்தலாக கருதினாலும் உண்மையில் என்னைப்பொறுத்தவரையில் அவர் ஒரு நடமாடும் அறிவுக்களஞ்சியமென துணிந்து கூறலாம். அவர் சம்பந்தப் பட்ட எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அவர் ஒரு சகல கலா வித்தகர் என்பதும் ஒரு பூரணத்துவம் மிக்க கனவானென துணிந்து கூறலாம். சமய, கலாசார, சாஸ்திர, சங்கீத, அரசியல், சட்டத்துறை மற்றும் மும்மொழிப் பாண்டித்தியம் என்ற பல் துறை வித்தகராக விளங்குகிறார்.

இலங்கை, இந்திய மற்றும் சர்வதேச அரசியல் வரலாறு மற்றும் பிரமுகர்கள் சம்பந்தமாக சகல விடயங்களிலும் நுனி நாக்கில் விடயங்களை எந்தத் தடுமாற்றமும் இன்றி மிக்க ஞாபகத்தில் வைத்திருப்பார். 50, 60 வருடங்களுக்கு முந்திய இலங்கை இந்திய சரித்திரம் சம்பந்தமான விடயங்களில் அவர் அத்துப்படியாக ஊறியிருந்தார். தமிழர் அரசியல் சம்பந்தமாக அமரர் தந்தை செல்வா மற்றும் G.G. பொன்னம்பலம் போன்றவர் களிடத்தில் மிகப் பற்றுக் கொண்டவராகவிருந்தார். மக்கள் நசுக்கப்ப டும் தீவிரவாதத்தை ஓரளவுக்குமேல் அவர் எப்போதும் ஏற்றுக் கொண்டதில்லை. நடந்தவை நடந்தவையாக இருந்தா லும் இந்தியாவின் பின்னணியில்தான் எமது பிரச்சினை முடிவுக்கு வருமென அடித்துக் கூறுவார். கடந்த காலங்களில் அவரின் மேற்படி கூற்றைப் பலர் ஏற்காவிடினும் தற்போதைய நிகழ்வுகள் அதன்வழியில்தான் போய்க்கொண்டிருப்பதை நாம் இப்போது அவதானிக்க முடிகின்றது. அரச மட்டத்தின் திமிர் ஆண்டவன் மற்றும் இதிகாச முடிவுகள் போல நிச்சயமாக நசுக்கப்படும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். நோய்வாய்ப்பட்டிருந்த கடைசிக் கிழமையும் அவரை வீட்டில் சந்தித்த போது வீரபத்திரர் கோவிலியல் நிர்வாகம் மற்றும் பொது விடயங்களில் என் பங்களிப்பை மிக உற்சாகப்படுத்தினார். "சாதிக்க முடியாதவர்கள் சாதனையாளர்களை ஏற்பதில்லை" என என்னைப் பல வழிகளிலும் ஊக்கப்படுத்தினார். "என்னப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலநாட்களாக உம்மைச் சந்திக்கவில்லையென்று" தனது ஆதங் கத்தை அவர் வெளிப்படுத்தும்போது மிக மனநிறைவாக விருக்கும். அவரைச் சந்திக்கும் ஒவ்வொரு முறையும் நான் அவரிடமிருந்து ஏதாவது ஒரு புது விடயத்தை கற்றுக்கொள் வேன்.

எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் என்னும் யோக சுவாமியின் கூற்றிற்கொப்ப அவர் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டார். நாம் நினைத்த வாழ்வு எமக்குக் கிடைக்கா விட்டால் கிடைத்த வாழ்வை பூரணமாக ஏற்றுக்கொண்டு வாழ்ந்து மேன்மையடைய வேண்டுமென்பதே நாம் அவரிட மிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும்.

அமரர் ஆத்மா சாந்தியடையவும் அவர் குடும்ப உறவுகள் மென்மேலும் சிறப்படையவும் அவர் விட்டுச் சென்ற மிகுதிப் பணிகளை அவர் உறவுகளும் சம்பந்தப்பட்டவர்களும் நிறைவேற்ற இடம் கொள்ள வேண்டுமென இறைவனை வேண்டி நிறைவடைகின்றேன்.

"நண்பனை காலப்போக்கில் மறக்கலாம் - ஆனால்
நட்பை உயிர் உள்ளவரை மறக்க முடியாது"

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!

வ. வர்ணகுலசிங்கம்,
உடுப்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் எங்கள் சிந்தையில் இருப்பார்

அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும் நிறைந்த நல்லறிஞரை இழந்துவிட்டோம் எனும் பெரும் கவலை சிந்தையைக் கலங்க வைக்கின்ற இவ்வேளையில் அவரைப்பற்றிய நினைவுகளை மீட்கும் போது...

அவர் தனது சொந்த வாழ்விலும், குடும்ப வாழ்விலும் நிறைவாக வாழ்ந்தது மட்டுமல்லாமல் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை ஆன்மீகப் பணியிலும் ஆலயப் பணியிலும் செலவிட்டார்.

எமது ஊரில் உள்ள ஆலயங்களில் நடைபெறும் முக்கிய விடயங்களில் தனது பங்களிப்பையும் ஆலோசனையையும் வழங்கி சிறப்பித்துள்ளார். உதாரணமாக வீரபத்திரர் ஆலய கும்பாபிஷேக மலர் வெளியீட்டுக் குழுவிலும் இடம்பெற்று மலர் சிறப்பாக வருவதற்கு முழு மூச்சாகப்பாடுபட்டார். தனது இறுதிக் காலம் வரை பண்டகைப் பிள்ளையார் ஆலயத் திருப்பணியை நிறைவு செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் தூய்மையாக செயலாற்றினார்.

2009ஆம் ஆண்டில் நடைபெற்ற உடுப்பிட்டி சைவப் பிரகாச வித்தியாசாலை பரிசளிப்பு விழாவில் பங்குபற்றி பாடசாலை நிறுவுனர் நிற்சிங்கர் வீரகத்திப்பிள்ளை உபாத்தியார் பற்றிய நினைவுப் பேருரையை நிகழ்த்திச் சிறப்பித்தார். நூற்றாண்டுகள் கடந்த பாடசாலையின் வரலாற்றை அறிந்த மூதறிஞராக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அன்பான வேண்டுகோளுக்கிணங்கி எங்களது இஸ்ட தெய்வமாகிய பண்டகைப்பிள்ளையார் பற்றிய ஸ்தல புராணத்தை பக்தி சிரத்தையோடு பல அரிய தகவல்களையும் திரட்டி கால நிர்ணயங்களையும் வகுத்து எழுதி முடித்தார். இது வரையில் செவிவழிச் செய்தியாகவும் கர்ணபரம்பரைக் கதையாக வும் இருந்து வந்த அற்புதமான ஸ்தல புராண சரிதத்தை பல நாட்கள் ஆய்வு செய்து சரிபார்த்து எமது கையில் சேர்ப்பித்தார்.

இக் காலகட்டத்தில் பலமுறை உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டார். பண்டகைப்பிள்ளையார் அருளால் உடல் நலம் தேறி ஆலயத் திருப்பணிகளும் ஓரளவு நிறைவு பெறச் செய்து மகோற்சவம் தொடங்கி மூன்றாம் நாள் அவரது ஆன்மா பண்டகைப் பிள்ளையாரிடம் அடைக்கலம் ஆனது.

பண்டகைப் பிள்ளையாரது ஸ்தல புராணம் புத்தகமாக வெளிவரவேண்டும் என்ற ஆதங்கத்தையும் நிறைவேற்றி, அவர் விட்டுச்சென்ற பணிகளையும் தொடரச் செய்வோம். அவர் என்றென்றும் எங்கள் சிந்தையில் இருப்பார். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சோதிட விஞ்ஞான ஆய்வாளர்
நடராசா – நந்தகுமார்,
உபதலைவர்,
உடுப்பிட்டி நலன்புரிச் சங்கம், கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Late Mr. K. Sivakolunthu was known to me for about forty years. I had the pleasant opportunity of working with this gentleman at Medawchiya Post office.

While working at Medawechiya Post Office I was able to study the qualities of him.

He is very kind, helpful and honest. He had leadership qualities. He always acted without fear or favour. More than everything he is god fearing. These qualities attracted me towards him. Even after moving away from Medawachiya. I had very cordial relation with him and his family.

Department of post and Telecommunication is service oriented. He really fit into the department. He always believed in hard work with dedication. These qualities earned him respect in the Department of Post and Telecommunication. He has served in post Offices like Mutuwal, Chilaw, Atchuvely and Mannar. His hard work paid him dividend. He was promoted in every step of his career and retired as Chief Post Master Chilaw.

He was a loyal member of the Union of post and Telecommunication Officers. He always answered the call of the Union to part take in Trade Union action. Thoiugh he has not taken any post in the union he is a very active member.

In his private life too he believed in helping others in which ever way possible. I have observed this since I met him first in Medawachiya. In fact he has helped me a lot.

I am really sorry that I could not pay my last respect to a wonderful person. May he rest in peace.

**S. Wijayachandran**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A brother shares childhood memories and grown-up dreams.

Anna was a hard-working, intelligent, caring and very thoughtful person. He was very close to his friends and family and had a lot of people who cared about him.

Whenever I had a problem and needed someone to talk to he was there for me. We have not seen each other for over 25 years and have been through a lot over the years, but no matter where life took us we could count on one another.

My brother was a dedicated and loving husband and father. He always spoke highly of his family and loved them more than anything in life. Anna loved life and lived each day to its fullest.

I know that it will be very difficult for my family and going forward without Anna in our lives.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

However, I also know that my brother would not want us to be overwhelmed with sadness.

He was a very strong and positive individual and would always look for the best in any situation and would want us to do the same. Let's remember Anna for all of his great qualities and appreciate the time we spent with him. He may be gone but his memory will live on in us forever.

We met post master periappa in Achuveley in 1988 when we came for vacation. He made an effort to visit our family often when we were in Sri Lanka. He cared about us a lot and never wanted to lose touch. As we grew up, we wouuld often chat on the phone.

It isn't possible to put into words the importance of family and how much periappa meant to us. He has positively influenced our lives in so many ways and we will miss him. God bless you periappa, your friends and family will miss you forever.

Thisivirasingan, seyone, Thayapary, Sukkasini and Nekha.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OM Namasivaya
# A Tribute to our loving Mama

When we first heard about the sudden demise of Sivakolunthu Mama we were deeply saddened. Over the last few years, he frequently asked us to come to Sri Lanka, but due to various reasons it never seemed to materialise.

Every time when we phoned each other, mama would always asu "what can I do for you?" such was the thoughtful nature of mama. Even when his health was diminishing he would remain very considerate of the needs of others with out focussing upon his own condition and requirements.

When my mother died he contacted me and shared lots of kind advice that I hold dear to this day. Although we are aware that one day we all have to depart from this worldly plane of existence,when the time comes for our loved ones leaving it remains very difficult to accept. However, we take comfort in knowing that the Atma, the true self is eternal and that the body is merely a vehicle to facilitate our journey back to our true nature with Lord Parameshwara.

Many times when we spoke, he would be very enthusiastic to talk about pandakai pilliyar and veeramahakali Amman temple. This was indicative of the genuine love



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

sincerity he had for the divine. He dedicated much of his life doing voluntary service for Hindu temples such as pandakai pilliyar veeramahakali Amman and sannithikovil.

Mama was a very caring husband and father for his wife and children, but he also was always considerate of the needs of his relatives and friends. He was a man of notable integrity, honesty and reliability. His discipline and virtuous conduct was his way of adhering to the core saiva principles and values that he was exposed to throughout is his upbringing

Mama, my husband and I will miss you dearly. I would like to conclude this message by quoting from karaikal Ammaiyar's Arpudhath thiruvandh Athi

Eravaatha Inpa Anpu vendi[ pin vendukinrar piravaamai vendum / meendum pirappu undale

Unnai enrum maravaamai vendum [ Innum vendum arava Nee Aadum poathu[ Makilnthupaadi
Uu adiyinkeel erukka enraar

We pray that Lord shiva ensures that your soul unites with Him and therefore you will forever remain immersed with in His blissful nectar.

Anbe Sivam! OM Shanti! OM Shanti! OM Shanti!
Ever loving Niece Rathy, Sri and children
['pergola' Carlton Road New Malden Surrey UK]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நீங்காத நினைவலைகள்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றிற் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க தனக்கென மட்டுமன்றி பிறருக்காகவும் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்ந்து மனிதருள் மாணிக்கமாய், இன்சொற்பேசி, அன்புடனும், பாசத்துடனும், நேசத்துடனும், இன்முகத்துடனும் மனித நேயம் எனும் பண்பு கொண்டு, பல்வேறு காலகட்டத்திலும் பொது நலனை முதன்மைப்படுத்தி, தாராளசிந்தனையுடன் பொதுப் பணிகளிலும் தன் கடமையை திறம்படச்செய்த எங்கள் அன்பு கொழும்பு மாமாவின் இழப்பு யாராலும் ஈடுசெய்ய முடியாத ஒன்று.

சகலதுறைகளிலும் அறிவாளியாகவும், விற்பன்னராகவும் விளங்கிய இவர், நாம் பிறந்து நினைவு தெரிந்த நாள் முதல் எங்கள் வீட்டில் நடக்கும் நன்மை, தீமைகளையெல்லாம் தன் குடும்பத்தினருடன் வந்து பல வழிகளிலும் பங்கெடுப்பது எம்கண்முன்னே நினைக்க தோன்றுகின்றது. நம் பெற்றோர் இழப்பின் பின்னரும் எமக்கு சகல வழிகளிலும் ஒரு நல் வழி காட்டியாகவும் வாழ்க்கை எனும் தத்துவத்திற்கு முன்னு தாரணமாகவும் மாமா இருந்தது ஒரு தன்நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் இவரது திடீர் மறைவா னது எமக்கு மிகுந்த பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஈடு செய்ய முடியாத அன்னாரின் நினைவலைகளைப் பின்பற்றி, இவரது ஆத்மா உடுப்பிட்டி பண்டகைப்பிள்ளையாரின் பாதக்கமலங்களில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மருமக்கள்
சுஜாதா நிரஞ்சன்
விஜயதர்சினி பகீரதன்
(கோப்பாய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துன்பத்துளிகள்

பண்டு, பாசத்தின் உறைவிடமாகவும், எமது அக்காவின் குடும்ப விளக்காகவும், எம் குடும்பத்தின் வழிகாட்டியாகவும் வந்தமைந்த எமது அத்தானின் திடீர் மறைவு எமக்கு மிகுந்த மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

தன்நம்பிக்கை, விடாமுயற்சி, பக்தி என்ற நற்பண்புகளை அணிகலன்களாகப் பூண்டு சமுகத்திற்கும் எம் குடும்பத்தினருக்கும் முன்னோடியாகவும் வாழ்ந்து எமக்கு நல்வழிகாட்டிய அன்னாரின் ஆத்மா தொண்டமனாறு செல்வச்சந்நிதி, மற்றும் உடுப்பிட்டி பண்டகை~~ப்பன்~~ பிள்ளையார் பாதக்கமலங்களில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மைத்துனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## To Our Dear Uncle

I will always remember sivakolundu mama as a dear uncle who drops into our house when - ever he comes to colombo. He uses very end earing language in a soothing soft tone which is very affectionate.

Sivakolundumama is a highly driven individual. Initiating community services especially religious ones. He is very pro-active on the fund raising front- which I consider the most difficult of all activities. He is persistent even during recession times. Even during the last months in his life he tolled and persisted with his service to the community. I am told he organises and delivers hindu ceremony's very effectively.

May Sivakolundu mama's soul attain eternal peace and his family also have comfort that he has achieved this-though their loss would be deeply felt.

**with All our love and prayers for his soul**
**uma, Hari,Karthi and sekar.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Sivakolunthu Mama,

It was shocking to hear that mama had passed away. He spoke to us only two weeks ahead of his demise. He was a helping hand in need. He actively in volved kovil development in uddupitty. He was always in touch with us in regard to kovil annual sanga Abishegam that our family contribute to perform for years and Mam a had carried out all the necessary arrangements on our behalf.

Thank you for your service, which is still green in our mind

May your soul rest in peace!

May God support your family to come out of this grievancell

**From**
**Mrs Nagamma Maheswaran**
**Shankar, Kumar and Manohar families**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்படி மறப்போம்...

தடைகள் பல தாண்டி
தன்னலம் கருதாது தம்பிலுவில் வந்து
எம்மண நாளில் எம்மை மனமார வாழ்த்தி
ஆசீர்வதித்ததை எப்படி மறப்போம்?

தரையால் கடந்து வர முடியாத வேளை
ஆகாயத்தால் பறந்து கொழும்பு வந்து
முதல் பேத்தியைத் தான்
முத்தமிட்டுக் குழாவியதைத் தான்
எப்படி மறப்போம்.

மூத்தமகள், மருமகன்.
பேத்தி குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீலர் செந்நெறிச் சுவடு

சிவக்கொழுந்தின் பாதித் தேவாம்பிகை
சீலமுறத் தந்துவந்த கேசகுமாரி
சிவந்த மன உடற் செல்வன் புவனகுமார்
சிறந்து விடும் உளவலன்புப் புவனகுமாரி
சிவாக்கிய சிந்தைத் தவம் மேவு தாமகுமாரி
சிரவணத்தின் மாலை சூட்டிய கேதீஸ்வரன்
சுகானந்த சுபீட்ச பேரன் அகிலேஸ் இத்
தரணியெலாம் தேடவைத்து சிவாக்கியச்
சுகவாரியில் திழைத்திடும் சீலர் செந்நெறிச்
சுவடு என்றும் சீர்பெற்று ஓங்க
சுகந்தம் படர்ந்து சுபீட்சமுற நாம்
சுற்றம் சூழலை சுகமுறச் செய்குவமே.

*மனைவி:* **தேவாம்பிகை**
*பிள்ளைகள்:* **கேசகுமாரி, தாமகுமாரி, புவனகுமார், புவனகுமாரி**
*மருமகன்:* **கேதீஸ்வரன்**
*பேரன்:* **அகிலேஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினோத உயிரினங்கள்

1. அதிகநீர் அருந்தும் பறவை ~ புறா
2. மிகச்சிறிய முட்டையிடும் பறவை ~ தேன்சிட்டு
3. சத்தமிடாத விலங்கு ~ ஒட்டகச்சிவிங்கி
4. ஞாபகசக்தி கூடிய விலங்கு ~ யானை
5. நீலநிற இரத்தத்தை உடைய கடல் உயிரினங்கள் ~ நண்டு, இறால்
6. பல்லில்லாத முலையூட்டி ~ தேவாங்கு
7. கடல்நீரைப்பருகும் ஒரேயொரு பறவை ~ பென்குயின்
8. பறக்கும் போதே தூங்கும் பறவை ~ ஆல்பட்றாஸ்
9. மிகப்பெரிய வாயுள்ள விலங்கு ~ நீர்யானை
10. பித்தப்பை இல்லாத முலையூட்டி ~ எலி
11. நாக்கு இல்லாத ஊர்வன ~ முதலை
12. கண்களின் மூலம் வியர்வையை வெளியேற்றும் உயிரினம் ~ முதலை
13. பறக்கும் முலையூட்டி ~ வெளவால்
14. நீந்தத்தெரியாத விலங்கு ~ ஒட்டகம்
15. மண்டையோடும் அலகும் ஒரே எலும்பால் அமையப்பெற்ற பறவை ~ மரம்கொத்தி

## உலகக் குறியீடுகளும் விளக்கமும்

1. ஒலிவ் இலைகள் ~ சமாதானம்
2. வெண்புறா ~ அமைதி
3. சிவப்புச்சக்கரம் ~ வளர்ச்சி
4. மஞ்சள்க்கொடி ~ தொற்றுநோய்
5. கறுப்புத்துணிப்பட்டி ~ துக்கம்
6. கண்கள்கட்டப்பட்டு கையில்தராசு வைத்திருக்கும் பெண் ~ நீதி.
7. சிவப்பு முக்கோணம் ~ குடும்பக்கட்டுப்பாடு
8. செஞ்சிலுவை ~ மருத்துவ உதவி
9. அரைக்கம்பத்தில் கொடி ~ துக்கம்
10. சிவப்பு விளக்கு, கொடி ~ ஆபத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவலையின் என்றுமே தூங்காத உள்ளங்கள்

*முடியாத வாழ்வை முடியுமெனவுன் தம்பி ஆறுமுகனையழைத்து பிரியவெம் குடும்பம்!*
*பகவதியம்மா சேயோடு தழைத்தோங்க பரிசாயுயர்வூட்டி பணி புரிந்த சிவக்கொழுந்து பெரியப்பா தெய்வமே. தரணி போற்றும் உடுப்பிட்டி பண்டகைப்பிள்ளையார் தேர் உற்சவத்தில் குலவழி பூண்டுவித்தாய்!*
*சீர்பெருகு மருவளர் மாமியின் வயல்புலம் மழுங்காது தந்தையின் பின் தாரணி சிறப்புற்றமன!*
*தருணம் காட்டிய பெரிய தயாளத் தந்தையே உன்மின்னிகர் அருள் வடிவம் நிலையாக நிலைக்கயென்றுமே!*
*சந்நிதிக் கந்தனின் வேல்சார்ந்த திருவுருவப்பாதமலரை என்றுமே மறவோம் கருணை வழித்தெய்வமே!*
*தூண்டுயர் சோதிகண்ட எங்களை சிவகுமார், விஷ்ணுகுமார், பேரின்பகுமாரி, இரத்தினகுமாரி, மகேந்திரகுமாரியாம் மாண்பு கொண்டோங்க வைத்தாய் நீயே!*
*மங்கள மணியாய் நின்றாய் நீயே மாசிலா மணவுயர்வு கொண்ட மாமணியே வாழி!*

இறை தொண்டு, தானதர்மம், எல்லோரையும் ஒருங்கு இணைத்து அன்பாகச் சீர் செய்யும் தவவலிமை கொண்ட எங்கள் பெரிய தந்தையார் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து (ஐயா) அவர்கள் ***30.06.1930*** இல் பிறந்து நற்பயனாற்றி ***30.07.2013*** இல் சிவபதம் எய்தியுள்ளார். இவர் வாழ்ந்த காலகட்டத்திற்குள் பெருமளவு காலம் தமது தம்பியாகிய கதிரிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகமாகிய எமது தந்தைக்கு உயிரனைய சகோதரனாக இருந்து வந்தார். இதனை எங்களால் என்றுமே மறக்க முடியாத நினைவாக இருக்கிறது.

இவர் பிரதம தபால் அதிபராக நாட்டின் பல பாகங்களில் கடமையாற்றிய காலங்களிலும் எங்களுடைய குடும்ப நலன்கள் யாவற்றிலும் தந்தைக்குத் தந்தையாகப் பணியாற்றி வந்துள்ளார்.

எங்கள் குடும்பம் தந்தையை இழந்து நற்கதியற்றிருந்த நேரத்தில் அப்பாவின் மரண நிகழ்வுகளையும், துன்பசாகரங்களை யும், இன்பமான மங்கள நிகழ்வுகளையும் தமது பொறுப்பில் சுமையாகத் தாங்கி எமது குடும்ப வாழ்வின் உயர்விற்காகவும் உயிர்மூச்சாக இருந்து கொண்டவர். எமது தாயார் பகவதியம்மா வையும் தனது சகோதரியாகப் பார்த்து தருணத்திற்கு ஏற்றவாறு கலங்கவிடாது ஆலோசனைகளைக் கூறி மேன்மைப்படுத்திக் கொள்வார் பெரியப்பா. எங்கள் அனைவரின் சிறப்பிற்கும், உயர்விற் கும், மேம்பாட்டிற்கும், உறுதுணையாக வாழ்ந்துள்ளார் என்பத னையும் உறுதிப்படுத்தி நாம் எல்லோரும் பெரியப்பா சிவக் கொழுந்தின் ஆத்மா சாந்தி நிறைவு பெற இறைவனை முழுமனது டன் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆசிகள் மனிதன் ஆத்மாவில் இன்புற்று ஆத்மாவில் திருப்தியடைந்து ஆத்மாவில் மகிழ்ந்திருப்பதே சிறந்ததாகும். உலக வாழ்க்கையில் நீ ஈடுபடு ஆனால் இறைவனை மட்டும் எப்போதும் நினைத்துக்கொண்டிரு. ஒருபோதும் அவனுடைய மார்க்கத்தை விட்டுப்புறம் போகாதே சிவம் கொடுத்துள்ள பொறுப்பை நாம் புறக்கணிப்பது சிவத்தை புறக்கணிப் பதற்கு ஒப்பானது.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கதிரிப்பிள்ளை ஆறுமுகம் மனைவி,
பிள்ளைகள்,
இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திரம்

**நினைத்தவை யாவும் நிறைவேற....**

விநாயகர்:

*ஓம் ஏகதந்தாய வித்மஹே*
*வக்ரதுண்டாய தீமஹி*
*தன்னோ தந்தி ப்ரசோதயாத்*

**ஆயுள் பலம் கூடிட....**

சிவன்:

*ஓம் மஹாதேவாய வித்மஹே*
*ருத்ர மூர்த்தயே தீமஹி*
*தன்னோ சிவ ப்ரசோதயாத்*

**பிணிகள் தீர்ந்திட...**

ஐயப்பன்:

*ஓம் பூதநாதாய வித்மஹே*
*மஹா சாஸ்தாய தீமஹி*
*தன்னோ ஐயப்ப ப்ரசோதயாத்*

**முன்னோர்களின் ஆசி பெற...**

பரசுராமர்:

*ஓம் ஜமதக்ஞாய வித்மஹே*
*மஹாவீராய தீமஹி*
*தன்னோ பரசுராம ப்ரசோதயாத்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானம் பெற்றிட...

ராமர்:

ஓம் தாஸரதாய வித்மஹே
சீதாவல்லபாய தீமஹி
தன்னோ ராம ப்ரசோதயாத்

## கல்வியில் தேர்ச்சி பெற...

ஹயக்ரீவர்:

ஓம் வாகீஸ்வராய வித்மஹே
ஹயக்ரீவாய தீமஹி
தன்னோ கம்ஸ ப்ரசோதயாத்

## மாங்கல்ய பாக்யம் பெற...

துர்க்கா:

ஓம் காத்யாயனாய வித்மஹே
கன்யாகுமார்யை ச தீமஹி
தன்னோ துர்க்கி ப்ரசோதயாத்

## மகப்பேறு வாய்க்க...

முருகன்:

ஓம் குமாராய வித்மஹே
சக்தி ஹஸ்தாய தீமஹி
தன்னோ ஸ்கந்த ப்ரசோதயாத்

## மனம்போல் மாங்கல்யம் கிட்ட....

ராதா:

ஓம் ஸர்வ ஸம்மோஹின்யை ச வித்மஹே
விஸ்வஜனன்யை ச தீமஹி
தன்னோ க்ருஷ்ண சக்தி ப்ரசோதயாத்

## குழந்தைப் பாக்கியம் பெற...

வாமனர்:

ஓம் த்ரிவிக்ரமாயை வித்மஹே
விஸ்வரூபாயை ச தீமஹி
தன்னோ வாமன் ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகோதரர்களிடையே ஒற்றுமை நிலவ...**

**ஷண்முகன்:**

ஓம் உமாசுதாய வித்மஹே
மஹா சேனாய தீமஹி
தன்னோ ஷண்முகப் ப்ரசோதயாத்

**செல்வ வளம் சேர்ந்திட...**

**மஹாவிஷ்ணு:**

ஓம் நாராயணாய வித்மஹே
வாஸுதேவாய தீமஹி
தன்னோ விஷ்ணு ப்ரசோதயாத்

**லட்சுமி கடாட்சம் நிலவ...**

**வராஹர்:**

ஓம் பூவராஹாய வித்மஹே
ஹிரண்ய கர்ப்பாய் தீமஹி
தன்னோ க்ரோடஹ ப்ரசோதயாத்

**எண்ணியவை ஈடேற...**

**ஸ்ரீனிவாஸர்:**

ஓம் நிரஞ்சனாய வித்மஹே
நிராபாசாய தீமஹி
தன்னோ ஸ்ரீனிவாஸப் ப்ரசோதயாத்

**வறுமை அகல...**

**மகாலஷ்மி:**

ஓம் பத்மவாஸின்யை வித்மஹே
பத்மலோசனீ ச தீமஹி
தன்னோ லக்ஷ்மி ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யமகயம் விலக...**

**கருடன்:**

ஓம் பக்ஷிராஜாய வித்மஹே
ஸ்வர்ண பக்ஷாய தீமஹி
தன்னோ கருட ப்ரசோதயாத்

**சந்தான பாக்யம் பெற...**

**கிருஷ்ணர்:**

ஓம் தாமோதராய வித்மஹே
வாசுதேவாய தீமஹி
தன்னோ க்ருஷ்ண ப்ரசோதயாத்

**சர்ப்பதோஷம் விலகி**
**சந்தான பாக்யம் பெற...**

**நாகராஜன்:**

ஓம் ஸர்ப்பராஜாய வித்மஹே
நாகராஜாய தீமஹி
தன்னோ அநந்த ப்ரசோதயாத்

**கல்வி அறிவு மேம்பட...**

**சரஸ்வதி:**

ஓம் வாக்தேவ்யை ச வித்மஹே
விரிஞ்சி பத்ன்யை ச தீமஹி
தன்னோ வாணி ப்ரசோதயாத்

**திருமணத் தடை நீங்க...**

**சுக்கிரன்:**

ஓம் அஸ்வ த்வஜாய வித்மஹே
தனுர் ஹஸ்தாய தீமஹி
தன்னோ சுக்ர ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகுனத்தால் மனம் சஞ்சலப்பட்டால், இந்தத் துதிகளைச் சொல்லி இறைவனை வழிபட்டுச் செல்வது நல்லது

கணபதியென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதியென்றிடக் காலனும் கைதொழும்
கணபதியென்றிடக் கரும மாதலால்
கணபதி யென்றிடக் கவலை தீருமே.

***

"விநாயகனே வெவ்வினையை வேர் அறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணில் பணிமின் கனிந்து"

***

நாளென் செயும் வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங் கொடுங் கூற்றென் செயுங்குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையும் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பும் எனக்கு முன்னேவந்து தோன்றிடினே

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சுமுகந் தோன்றின் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சேலென வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்.

***

மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறு தோள் போற்றி
காஞ்சி மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னா சேவலும், மயிலும் போற்றி
திருக்கை வேல் போற்றி போற்றி

***

முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரக துதி

**சூரியன்**

*காசினி யிருளை நீக்கம் கதிர்ஒளி வீசி எங்கும்*
*பூசனை உலகோர் போற்றப் புசிப்போடு சுகத்தை நல்கும்*
*வாசி ஏழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய் வந்த*
*தேசிகா எனை ரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி!*

**சந்திரன்**

*அலைகடல் அதனில் நின்றும் அன்று வந்து உதித்தபோது*
*கலைவளர் திங்களாகிக் கடவுளர் எவரும் ஏத்தும்*
*சிலைமுதல் உமையாள் பங்கன் செஞ்சடைப் பிறையாய் மேரு*
*மலை வலமாய் வந்த மதியமே போற்றி!*

**அங்காரகன்**

*வசனநல் தைரியத்தோடு மன்னவர் சபையில் வார்த்தை*
*புசபல பராக்ரமங்கள் போர்தனில் வெற்றி ஆண்மை*
*நிசமுடன் அவரவர்க்கு நீள் நிலம் தனில் அளிக்கும்*
*குசன் நிலமைகளாம் செவ்வாய் குரைகழல் போற்றி போற்றி!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதன்

மதன நூல் முதலாய் நான்கு றை புகல் கல்வி ஞானம்
விதமுடன் அவரவர்க்கு விஞ்சைகள் அருள்வோன் திங்கள்
சுதன் பசு பாரி பாக்கியம் சுகம்பல கொடுக்க
புதன்கவி புலவன் சீர்மால் பொன்னடி போற்றி போற்றி!

### குரு

மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க்கு அரசன் மந்திரி
நிறைசொரி கற்பகப் பொன் நாட்டினுக்கு அதிபனாகி
நிறைதனம் சிவிகை மண்ணில் நீடு போகத்தை நல்கும்
இறையவன் குரு வியாழன் இருமலர்ப் பாதம் போற்றி!

### சுக்கிரன்

மூர்க்கவான் சூரன் வாணன் முதலியோர் குருவாய் வையம்
காக்க வான்மழை பொய்விக்கும் கவிமகன் கனகம் ஈவோன்
தீர்க்கவானவர்கள் போற்றச் செத்தவர் தமை எழுப்பும்
பார்க்கவன் சுக்கிரன் பாதபங்கயங்கள் போற்றி

### ராகு


வாகுசேர் நெடுமால் முன்னம் வானவர்க்கு அமுதம் ஈயப்
போகும் அக்காலை உன்றன் புணர்ப்பினால் சிரமே அற்றுப்
பாகுசேர் மொழியாள் பங்கன் பரன் கையில் மீண்டும் பெற்ற
ராகுவே உனைத் துதிப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே!

### கேது


பொன்னையின் னுதிரத்தில் கொண்டோன் புதல்வர்தம்
பொருட்டால் ஆழி
தன்னையே கடைந்து முன்னத் தண்அமுது அளிக்கல் உற்ற
பின்னைநின் கரவால் உண்ட பெட்பினில் சிரம்பெற்று உய்ந்தாய்
என்னைஆள் கேதுவே இவ்விருநிலம் போற்றத் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டகைப் பிள்ளையார் தீர்த்த உற்சவம்



பண்டகைப் பிள்ளையார் தீர்த்த உற்சவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெறிமுறை தவறாத சிவக்கொழுந்து ஐயா

All Chals line must dil,
passing chrough malime te eternity will on shakes he any
Birth and diath are two sides of the same canid

சிலரது இழப்புக்கள் பிரிவுகள் பிறருக்கு குறிப்பிடத்தக்க தாக்கத்தையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்துவதில்லை ஆனால் சில இழப்புகள் அவர்களின் வீட்டிற்கும் சமுதாயத்திற்கும் பாரிய தாக்கத்தை உண்டுபண்ணும் அவர்கள் வாழும் ஒவ்வொரு நிமிடமும் பொன்னானவை அவர்களின் சேவை மக்களுக்குத் தேவை இந்த வரிசையில் எங்கள் தலைவர் சிவக்கொழுந்து ஐயா அவர்களின் பிரிவும் உடுப்பிட்டி கிராமத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு அவர் உடுப்பிட்டிப் பெரியவர்களில் இறுதி மனிதர் என்றே எமக்குத் தெரிகிறது. விசேடமாக எமது பண்டகைப்பிள்ளையார் ஆலயத்துக்கும், ஆலய பரிபாலன சபைக்கும் அவரின் பிரிவு ஈடு செய்யவே முடியாத இழப்பு என்பதை மறுக்க முடியாது அவரின் தன்னலம் கருதாத சேவைகள் அளப்பரியவை. அவர் எங்களுக்கு ஒரு வழிகாட்டி, ஆலோசகர் உற்சாகப்படுத்துபவர். அவரிடம் நாம் கற்ற பாடங்களைவிட, கற்கவேண்டிய பாடங்கள் பல இருந்தன ஆனால் இடைநடுவில் எங்களை விட்டுச் சென்றது எமக்கு பெரும் பின்னடைவு

அவர் எமது சபைக்குத் தலைவராக இருந்த காலத்தில் சபைக் கூட்டம் நடத்தும்முறை யாவராலும் மெச்சப்பட்டது. தலைவர் எப்படியிருக்க வேண்டும் சபை உறுப்பினர்கள் எப்படி பேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும், கூட்டத்தின் அமைதி என்பவற்றில் அவர் மிகவும் கண்டிப்பாக இருந்தார் மேலும் கோயில் விடயமாக பிறரைச் சந்திக்கச் செல்லும் போது எங்களை அறிமுகம் செய்யும் போது He is my rephew He is my brother என உரிமையோடு அறிமுகப் படுத்துவார்.

இவை எங்கள் முன் மட்டுமல்ல நாங்கள் இல்லாத போதும் இடம்பெறும் அத்தோடு ஒருவரை இனங்கண்டு ஒரு வேலையை ஒப்படைப்பதில் தனித்திறமை உடையவர் you have an ablity for it you can you must என உற்சாகப்படுத்துவார் மேலும் அவரை ஊரார் father of uduppiddy என்றே மதித்தார்கள் நாம் அவருடன் திருப்பணிச் சேகரிப்பிற்காக சென்றபோது மிகப் பெரும்பாண்மையான மக்கள் இன் முகத்துடன் பங்களித்தார்கள். மிகுதியானவர்கள் கூட மனம் திருந்தி தாங்களாகவே வந்து இணைந்தனர்.

உண்மையில் அவர் நோயுற்ற காலங்களில் கூடபிறரை வருத்தவோ அல்லது இறப்பை எதிர்பார்த்து காலங்களோ இல்லை அவர் சொல்வது இதுதான்.

Thone who have lined a good life do not fear death. Buls meet it calmly and even long for it in the face of great suffering. But chose who do mat have a heacoful consecience, dread death as though life means mothing liut physical forment. The challenge is to like our life so that we will he prepared for death when it comes

அவரின் பிரிவால் மிக துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக் கின்றோம்.

அவரின் ஆன்மா பண்டகைப் பிள்ளையாரின் திருவடிகளைச் சேரட்டும்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார்
ஆலய பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரோக்கிய வாழ்வில் உப்பு

கடல் சார்ந்த தரவை நிலத்திலே இயற்கையாகவே விளையும் உப்பு பதப்படுத்தப்பட்டு ஆரோக்கிய சுட்டிக்கு கிணங்க "அயடீன்" கலக்கப்பட்டு கறியுப்பாக பக்கற்றுகளில் அடைத்து விற்கப்படு கிறது.

நாம் பெரும்பாலும் உப்புள்ள உணவுகளையே விரும்பி உண்ணும் பழக்கத்தைக் கொண்டுள்ளோம். சமையலின் போது சோற்றுக்கு, கறிக்கு, உப்பு போட்டு பலபேர் சமைப்பதுண்டு, கருவாடு, அச்சாறு, ஊறுகாய், மோர்மிளகாய், பப்படம் போன்றவற்றிலும் கணிசமான உப்பு உண்டு.

சிலபேர் பச்சடி, சம்பல், முட்டைப்பொரியல் என்பவற்றிற்கு கறியுப்புடன் மேலதிகமாக அஜினோமோட்டோ, மீலோன் கெனூஸ் தயாரிப்புகளான (அண்மையில் ஹலால் பற்றிய சர்ச்சையில் இவை விமர்சிக்கப்பட்டவை) சோடியம் மொனோ குளுக்கோர்னேட் எனும் உப்பையும் சேர்த்து நாவுக்கு ருசியாக சமைத்துண்பதையும் காணலாம் பிள்ளைகள் விரும்பியுண்ணும் நொறுக்கு தீனிகளில் (ரிப்பிரிப்பி ஒனியன் பிஸ்கட் முதலியன) அதிகமாகவே பிரட்டப்பட்டுள்ளது. இது தவிர ரின்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைக்கப்பட்ட உணவுகள், சீஸ், பட்டர், மாஜரின் போன்ற வற்றிலும் உண்டு. மேலும் வெதுப்பக உணவுகளில் (Bakery Producks) பான் பிஸ்கட் போன்றவற்றில் சோடியம் பைகாபனேற் உப்பு கலக்கப்படுகிறது.

நாம் உப்பு கொண்ட உணவுகளை அதிகம் உண்ணும் போது அனுசேப, பிரசாரண தொழிற்பாடுகள் மூலம் உடல் கலங்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்துவிடுகிறது. அதிக உப்பு தண்ணீர் தாகத்தை ஏற்படுத்தும் இரத்த குழாய்களில் அமுக்கம் கூடி தலைவலி, நெஞ்சுபடபடப்பு சிறுநீரகங்கள் செயற்றிறன் பாதிப்பு, இதயதசை தடிப்படைதல் வீக்கமடைதல் போன்றன படிப்படியாக நாளாந்த வாழ்வில் ஏற்பட இடமுண்டு.

உப்பு சேர்ந்த கொழுப்புணவுகள் தொடர்ந்து அதிகம் சாப் பிட்டு வேலையின்றி இருப்பவர்களுக்கு இதயசுமை இரட்டிப்பாகி திடீரென மாரடைப்பு ஏற்படும் சாத்தியமுண்டு பல இளைஞர்கள் (Sedanrany work) கடின உழைப்பு இன்மையால் இவ்வாறு மாரடைப்பால் வெளிநாடுகளில் இறப்பதை நாம் கேள்விப்படுகி றோம்.

கொழும்பு, யாழ்ப்பாண நகரங்களில் வாழும் பாடசாலைப் பிள்ளைகள் பலர் தங்களது வயது உயரம் என்பவற்றிற்கு மாறாக அதிகரித்த எடை உள்ளவர்களாக இருப்பதற்கு பாரம்பரிய உணவு முறைகளை கடைப்பிடிக்காததே பிரதான காரணம் எனலாம்.

சீனி, கொழுப்பு, உப்பு, உணவில் மிகைபடும் போது எமது உடல் அவற்றை மேலதிக கொழுப்பு படைகளாக உடலில் படிய வைக்கிறது மட்டுமல்லாமல் நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் (High Blood Pressure) பார்வை குறைபாடு நித்திரையின்மை வேலை செய்யும் போது களைப்பும் இளைப்பும் என்பன உண்டாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுப்பாலை நாடாமல் பெற்றோர் பலர் பால்மா பெட்டிகளையே வாங்கி பிள்ளைகளிற்கு பால் குடிக்கக் கொடுக்கின்றனர். 28% கொழும்பு நிறைந்த பால்மா பக்கட்டுகள் பலவற்றில் நச்சுத்தன்மை (D.C.D, whey protein) காணப்படுவதாக அரசாங்கம் அறிவித்து அவற்றை எல்லா கடைகளிலிருந்தும் தற்போது அகற்றிவருகின்றமை ஒரு அதிர்ச்சிச் செய்தியாகும். இந்த நஞ்சு நாட்பட்டு சிறுநீரக வியாதிகளை உண்டு பண்ணக் கூடியது இப்பால்மாவானது 48000 மெட்ரிக் தொன்னிற்கும் அதிகமாக இலங்கையர்களால் பாவிக்கப்பட்டுள்ளது.

முன்னைய காலங்களில் தொண்டையில் பெருத்த கட்டிகள், கழலைகள் உடன் பெருத்த கண்கள் உள்ள பலரையும் மற்றும்விசாரப்பட்ட வருத்த நோயாளிகள் பலரையும் நாம் கண்டிருக்கிறோம். தொண்டைமானாறு செல்வசந்நிதி உற்சவ காலங்களில் ஆற்றிற்குக் குறுக்கே. தற்காலிக மண் பாதையின் இரு மருங்கிலும் இவ்வாறான பல நோயாளிகள் இருந்து பிச்சை எடுத்து வந்ததையும் நாம் அவதத்துள்ளோம் காரணம் அப்போதைய உணவு, ஆங்கில மருந்துகளை முறையாக ஆய்வு செய்யப் படாமையே எனபலர் விமர்சித்துள்ளார்கள். ஆனால் இன்று சரியான ஆய்வுகளிற்குப் பின் சுகாதார அமைச்சு உப்பில் அயடீன் கலந்து விற்பது. கட்டாயமாக்கியுள்ளது. அதேபோல் பல பக்க விளைவுகள் கொண்ட மருந்து உணவுகள் கடைகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளன. அறிவு மட்டம் 99% ஆக உயர்ந்து சராசரி மனித வாழ்க்கைக் காலம் 78 வயதாகவும் உயர்ந்துள்ளது. கறியுப்பு ஒரு நாளைக்கு 6 கிராமிற்கு மேல் பாவிக்க வேண்டாம் என்றும் அறிவித்துள்ளது. வைத்தியரைவிட ஒரு ஆய்வாளனை அல்லது மருத்துவ கண்டுபிடிப்பாளனை தலை வணங்குவது சிறந்தது போலும்.

சிரங்கு, சொறி, கடி, வியாதிகளிற்கு உப்பு ஒரு சிறந்த வெளிப்பிரயோக மருந்து ஆகும். உப்பையும் மஞ்சளையும் அரைத்து தினமும் தோல்வருத்தங்களிற்கு பூசிவர குணப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தோல் வருத்தங்கள் கடலில் குளிப்பதால் இல்லாமலே போய்விடுகிறது. குறிப்பாக வெய்யில் காலங்களில் உடல் முழுவதும் ஏற்படும் கடிக்கு கடல்நீர்குளிப்பு ஒரு அருமருந்தாகும்.

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்", என திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். உப்பு குறைந்தாலும் கூடினாலும் நோய் தான்

உப்பு இச்சையை தூண்டுமாதலால் ஒழுக்க, தர்ம ஸ்தாபனங்கள் சில உப்புள்ள உணவுகளை ஏற்பதில்லை, முனிவர்கள், சித்தர்கள், ஞானிகள் உப்பு அற்ற உணவுண்டு நீடிய காலம் வாழ்ந்ததாக சித்தமருத்துவம் கூறுகிறது. இன்னும் சில ஆலயங்களில் உப்புஅற்ற படையல்களையே ஆதிமூலத்திற்குப் படைக்கிறார்கள் ஆன்மீக வாதிகளின் அன்னதானத்திலும் உப்பு மிகமிக குறைவே.

உப்பு இல்லாப்பண்டம் குப்பையிலே என்பது முதுமொழி. உப்பு இல்லா பண்டம் மேசையிலே என நாம் எண்ணி உணவுகளை உண்போம்.

"உப்பு நெருப்பில் போட்டால் வெடிக்குது
சோளம் தீயில் இட்டால் வெடித்துப் பறக்குது"

இதை பார்த்துத் தானா ஆய்வாளன் உலக அழிவு மருந்துகளைக் கண்டு பிடித்தானோ?

மூத்த மருமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகளின் நிழல்களில்
## நீங்கா நிஜங்கள் சில...

சீர்பூத்த நெற்கதிர்கள் தலைசாய்க்கின்ற கற்பகதருவான பனைமரங்கள் சூழ்ந்த இயற்கை அழகு கொழிக்கும் உடுப்பிட்டிப் பதியில் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்ற ஔவையாரின் வாக்குக்கு இலக்கணமாக வாழ்ந்த உயர்சைவ வேளாளர் குடியில் தோன்றிய இவருக்கு பரம்பரையாக மூதாதையர் நாமம் இடும் சம்பிரதாயப்படி "சிவக்கொழுந்து" என பெயரிட்டனர். பெயருக் கேற்றாற்போன்று அழகும் அன்புநிறைந்த கள்ளங்கபடமற்ற புன்னகையும் பொறுமை நிறைந்த சுபாவமும் வயதுவேறு பாடின்றி பழகும் எளிமையும் கனிவான கண்டிப்பும் பேச்சாற்ற லும் என்றும் இளமையான தோற்றமும் அனைவர் மனங்கவரும் நகைச்சுவைப் பேச்சும் இவருடன் கூடிப்பிறந்த இயல்புகளாகும்.

இல்லறமான நல்லறத்திலே வாழ்வாங்கு வாழ்ந்து செல்வத்துள் எல்லாம் தலைச் செல்வமாக போற்றும் கல்விச் செல்வத்தையும் மக்கட்செல்வத்தையும் ஒருங்கே பெற்று பார்போற்றும் வண்ணம் வாழ்ந்த பெருந்தகை இவர்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தியிருக்கச் செயல்"
என்ற வள்ளுவனார் வாக்கிற்கேற்ப தன் மக்களை நற்பிரஜைகளாக வளர்த்துப் பெருமைகொண்டவர்.

அன்பாகவும் பண்பாகவும் அனைவருடனும் பழகும் தன்மை இவருக்கேயுரிய தனித்தன்மையாகும். இதனாலோ என்னவோ குழந்தைப்பருவம் முதலே நாம் "ஆசைஐயா" என அன்பாக அழைப்போம். எமது தந்தையார் இயற்கையெய்திய பின்னர் எமக்கு தந்தையாய் உடனிருந்து வழிகாட்டியவர். அவரது அறிவுரைகளும் அன்பான கண்டிப்பும் பரம்பரை விடயங்களை அடுத்த சந்ததியினர் அறியவேண்டுமென்ற பேரவாவினால் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதிலெல்லாம் நகைச்சுவையுடன் கூறி விளங்க வைக்கும் சொல்லாற்றல் இன்றும் எம்மனத்தில் நிழலாடுகின்றது.

பிரதம தபாலதிபராய் இருந்து ஓய்வுபெற்றாலும் தன்குடும்பம் தன்வேலையென வாழாதிருக்காது தனது கடைசிக் காலம் வரை சமூகத்தொண்டாற்றியவர். கடவுள் பக்தியில் தலைசிறந்தவர். தமிழ் சைவ பண்பாடுகளை செவ்வனே கடைப்பிடிப்பவர். பண்ட கைப்பிள்ளையார் ஆலய தலைவராக இருந்து இவராற்றிய பணி கள் அளப்பரியன. உண்ணாது உறங்காது தன் உடல் நோயையும் பொருட்படுத்தாது ஆலய திருப்பணியில் தன் வாழ்நாளைக் கழித் தவர். இவ்வாலய வளர்ச்சித் தோற்றமே இதற்கு சான்றுபகரும். அவரது ஒவ்வொரு செயல்களும் எமக்கு நற்பாடமாக வாழ்வியல் இலக்கணமாக எப்போதும் இருக்கும்.

உறக்கமும் விழிப்பும் போல உடல் பிறந்திறக்கும் தன்மை சிறக்கவே அறிந்தும் இந்த செகவாழ்வை மெய்யென்று எண்ணி இருக்காது இவ்வாழ்வியலில் ஆற்றவேண்டிய அறப்பணிகளை செவ்வனே செய்தார். அன்னார் மறைந்தாலும் அவராற்றிய பணிகள் என்றும் மறையாதவை. இவரது இழப்பை எண்ணிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கும் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூற எம்மிடம் வார்த்தைகளில்லை.

"பிறப்புண்டேல் இறப்புண்டு என்பது உலகநியதி", எனவே இன்றுள்ளோர் நாளை இருப்பது பொய்யென மண்ணுள்ளோர் கூறிய வாசகத்தை எண்ணி தேறுவோம். நிலையற்ற இவ்வுலகத்திலே நிலையான அறப்பணிகளை செய்து ஐங்கரனின் மகோற்சவநாளில் அவன்தாள் அடைந்த இவர் நிச்சயம் பேரின்பபெருவாழ்வான மோட்ஷவாழ்வை பெறுவார். அதற்காக தினம்தினம் பண்டகைப் பிள்ளையாரையும் செல்வச்சந்நதி முருகனையும் இறைஞ்சி அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளும்
மூரும் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்தாள் சதம் கச்சி ஏகம்பனே"

கதிரிப்பிள்ளை பாலசிங்கம்
குடும்பம்,
உடுப்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமுள்ள கொழும்பு மாமா

பாசமுடன் கொழும்புமாமா என நாம் அழைக்கும் நெஞ்சினிலே நிறைந்து இருக்கும் மாமாவே எம்மை எல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டு எங்கு நீ சென்றாயோ?

சிறுவர்களாக நாம் இருந்த எமக்கு எல்லாம் வழி காட்டினாய். நீ இருந்து சிறப்புடனே நாம் வாழ வகை செய்தாய். இனி எங்கு உனை காண்போம் மாமாவே

அன்பின் திருவுருவாய் அனைவரையும் அணைத்திட்டாய். துன்பங்கள் வந்த போதும் சோர்வில்லாது செயற்பட்டாய் உதவிகள் புரிந்து உத்தமனாய் வாழ்ந்த மாமாவே உன் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

மருமக்கள்

தவகுமார், செல்வகுமாரி,

ஆனந்தகுமார், அமுதகுமாரி

அன்புகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தப்பா

என்றும் சிரித்தமுகத்துடன்
அன்பின் உருவமாய்
பொறுமையின் வடிவாய்
காண்போமே
இனி எப்போது உங்களை காண்போமோ
குஞ்சா என்று கூப்பிட்டால்
மனதார மகிழ்வேனே
சிறிய தந்தை என்றில்லாமல்
எனக்குமொரு தந்தையாகி
வாழ்ந்தீர்களே
இனி எப்போது உங்களை காண்போமோ
உங்கள் ஆத்மா என்றும் அமைதியடைய பிரார்த்திக்கும்

உங்கள் பெறாமகள்
சசிலேகா ரகுநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாத் துயரில் தவிக்கும் மருமகன் தளையசிங்கம்

**'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு'**

பிறப்பு இறப்பு இரண்டுமே எப்பவோ முடிவு செய்யப்பட்டது தான், என்றாலும் பிரிவு என்று வரும்போது சாதாரண மனிதர் களாகிய எங்களால் தாங்கமுடியாத ஒன்று. நான் உவ்விடம் (உடுப்பிட்டிக்கு) வந்தபோது, 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்பமுன் எப்படியாவது மாமாவை பார்க்கவேண்டும் என்று தம்பி பேபியுடன் மந்திகை ஆஸ்பத்திரிக்கு சென்றபோது, அவர் என்னை அரைக்கண்ணால் பார்த்து அனுங்கியதும் என் கண்கள் பனித்து ஒன்றும் பேசமுடியாமல் போய்விட்டது. மேலும் அன்று இரவே கொழும்பு திரும்பிவிட்டேன். அவர் கேட்டபடி பிள்ளையார் கோவில் உற்சவத்திற்கு முன் வசந்தமண்டப நிலத்தில் பதிப்பதற்கு Floor Tiles வேண்டி அனுப்பிய நிம்மதியுடன் வீட்டிற்கு வந்த மறுநாளே மாமாவின் மறைவுச் செய்தி இடிபோல் என்னைத் தாக்கியது. பண்டகைப்பிள்ளையார் மாமாவை இன்னும் சிறிது காலம் உயிருடன் இருக்க அனுமதித்திருந்தால், திருப்பணிவேலை களை அவர்விருப்பப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக முடித்திருக்கலாம் இருந்தாலும் அவர் ஆன்மா எங்களுடன் கூட இருந்து இப்பணியை செய்து முடிக்க உதவும் என்பதில் எனக்கு எள்ளவும் சந்தேகம் இல்லை. மாமா உயிருடன் இருந்த போது இறைத்தொண்டுக்கே அவர் நேரத் தினை அதிகமாக ஒதுக்கி பணிவிடைகள் செய்து கொண்டிருந்தார் கடவுளின் உண்மையான புகழை விரும்பிச் சொல்லி எந்நாளும் வழிபட்டு வருவார்க்கு அறியாமையால் விளையும் நல்வினை, தீவினை இரண்டும் வந்தடையா. என திருவள்ளுவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

நான் வேலைக்காக கொழும்பு வந்தபோது, மாமா தாங்கள் தங்கி இருந்த வீட்டிலே தங்கவைத்து எந்த குறைவும் இல்லாது கவனித்துக் கொண்டார் அத்துடன் கொழும்பில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற நல்லறிவுகளும் சொல்லித் தந்து வழி நடத்தினர். இரவு நேரங்களில் எமது முன்னோர்கள் பற்றியும் எமது குடும்ப வரலாறுபற்றியும் நாம் பின்பற்றி நடக்கவேண்டிய பெரியோர்களையும் அவர்கள் தம் வாழ்ந்த காலத்தில் ஆற்றிய அரும் செயல்கள்பற்றியும் மிகவும் நேர்த்தியாகவும் விளக்கமாகவும் சொல்லித்தந்தவை பசுமரத்தாணிபோல் என் நெஞ்சில் பதிந்துள் ளது. செயற்கரிய செயல்களை செய்துமுடிப்பவரே பெரியோர்கள் எனப்படுவர் அதற்கிணங்க ஒரு சிறு கட்டிடமாக இருந்த பண்ட கைப்பிள்ளையார் கோவிலை தேவையான எல்லா மண்டபங் களுடனும் நாற்புற வீதிகளுக்கும் கோப்பிசமும் போட்டு அழகான வசந்தமண்டபத்துடன் அன்னதான மண்டபமும் அமைத்து தேர் முட்டியுடன் ஆலயத்துக்கு தேவையான அத்தனை உபகரணங் களையும் சேர்த்து கும்பாபிசேகத்துடன் வருடாந்த உற்சவமும் நடைபெற வழிஅமைத்தது நிச்சயமாக ஒரு செயற்கரிய செயலே இதை வேறு ஒருவரால் செய்திருக்க முடியாது என்பது உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவக்கொழுந்துமாமா தபால் அதிபராக இலங்கையில் அனேக மான பெரிய தபால் கந்தோர்களில் கடமை ஆற்றியுள்ளார் அவர் தங்கி ஆற்றிய ஊர்களில் எல்லாம் தன்னால் முடிந்த சிவத் தொண்டினை ஆற்றியுள்ளார் அதில் முக்கியமாக மோதரையில் தபால் அதிபராக கடமை ஆற்றியபோது வடகொழும்பு இந்து பரிபாலன சபையின் செயலாளராகவும் தலைவராகவும் திறம்பட தன் பணிகளை ஆற்றியுள்ளார். மாமா அறநெறியில் வாழ்ந்து சிவத் தொண்டினை தவறாது ஆற்றி வந்ததின் - பயனாக நற்பிள்ளை களை இறைவன் அவருக்கு அளித்துள்ளார். அவர்களும் கல்வியில் சிறந்து யாவரும் மெச்சும்படி நற்பதவிகளில் உள்ளனர்.

இவ்வுலகில் வாழவேண்டிய முறையில் வாழ்ந்து, அறநெறியில் சிறிதும் பிறழாது நின்று சிவத்தொண்டே பெருந்தொண்டாக செயலாற்றிய எனதருமைமாமா சிவக்கொழுந்து அவரது பெயருக் கேற்ப எனது மனதில் ஒரு தெய்வமாக வாழ்வார் அவர் இப்பிறவி யாகிய பெருங்கடலை நீந்திக்கடந்து இறைவனுடன் இரண்டறக் கலந்து ஆனந்தப் பெருவெள்ளத்தில் திளைத்திருக்க வேண்டும் என்று பிரார்த்திப்போமாக

சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mr.Kathiripillai Sivakolunthu Mama
## (Justice of Peace-*all island*) 31st day Remembrance

The well known retired chief Post master of post offices in Sri Lanka passed away on 30th July 2013 at the age of 83. The funeral took place at *"Siva Devi Illam,"* Uduppiddy on 4th August in the presence of his beloved wife, all children, in laws, relatives, neighbors, and religious dignitaries. Educationists, state employees, retired officers, friends, business community, representatives of various organizations, social leaders, and students were among the large gatherings to pay the last homage. The ritual ceremony was conducted by the *"Hindu kurrukulam"* and the cremation was held in *Vallai* Hindu cemetery. The ash of the remains was on the following day dissolved into the *Thondamanaru selvea sannathi* river in belief of reaching the main *GANGA which fountains* from God SIVA's Head.- **தாயினும் மேலான தலைவனென போற்றிசைப்பார்கள்....**

He fully devoted all his time to the development and expansion project of *Pandakai Pillayar Kovil, uduppiddy* in designation of the President. Building up better alignment of all members'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

support and other resources reflects his leadership qualities on the present sprit of team work.

He also participated in many rural works in order to promote life style of the rural folk. His tacit knowledge was also observed in some crucial moments to prove justice.

Mama was always very keen to hear whatever his little grand daughter says and see her progress admiring his fatherly quality with valuable guides.

**குழல் இனிது யாழ்இனிது என்போர் மழலை சொல் கேளாதவர்**-baby's words are sweeter than musical instruments).

He also remained feareslessly loyal to Hindu priests and the Hindu philosophy in the spirit of living positive qualities. This offered him to be an expert as well, in selecting auspicious time for all to start of any new assignment or work.

Mama finally participated in the *water cutting ceremony of Lord Veerapathirar, uduppiddy,* awaiting in the hot sun till the holy water was sprayed to all devotees by the chief priest but was unable to see the same festivals at pandakai & Selva Sannathi temples near future because God Siva (in name of Lord Veerapatirar) had already decided to call him.

The God (**தாயிற்சிறந்த தயவானதத்துவனே**-More obedient philosopher than any mother in the world-**சிவபுராணம்**) therefore sent a torrent of messages of calling him through omen. His pet cats and kiddies vanished one by one from his residence; The neighboring dogs started howling during slumber nights; carcass of bird suddenly fell in the backyard; unexpected rain fall during hot summer............;Subsequently he fell ill and the messengers



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of the lord brought him to the ultimate bliss.

The last words he murmured in the hospital bed were the disciplines of the annual festival of pandakai temple: **Do they conduct the festival properly?** And silently went unconsciousness due to weakness of the heart even though tried to tell further something at the last moments but it couldn't. The pronouncement of the ultimate line of words is still vibrated in the pandakai temple.

With his demise, we have lost the popular, well experienced, spiritual man we found in our uduppidy society. And my family extends our sorrow to his wife (mami), and children at their great loss, leaving for the eternal rest.

*This book conveys message of gratitude to all participants in today's alms giving.*

*UmaRavi Family,*
*Austerlaia.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த ஊரையும் மக்களையும் நேசித்தவர்
## அமரர் திரு.க.சிவக்கொழுந்து

உடுப்பிட்டியில் எங்கள் வீட்டுக்கு முன்புறமாக சற்றுத் தள்ளி மேற்குப்புறமாக ஒரு காணி. அந்தக் காணியில் வீடுகள் எதுவுமில்லை. இருந்தாலும் பாடசாலை நாட்களில் அடுத்தடுத்து அந்தக்காணிக்கு போய்வருவதுண்டு. விழுந்த பனம் பழம் பொறுக்கு வதை விட விருப்பமாக அணிஞ்சில் பழம் பொறுக் கவும் ஈச்சம்பழக்குலை வெட்டவும் போய்வருவதுண்டு.

அந்தக்காணிக்கு அடுத்ததாக அமைந்திருந்தது மாணிக்க ஆச்சியின் காணி. அந்தக்காணியைக் கடந்தால் அடுத்திருந்தது யாழ்ப்பாண பஸ் ஓடும் பிரதான பாதை. மிகவும் குறுக்கு வழியாக இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் பிரதான பாதைக்குச் செல்லலாம் என்பதற்காக மாணிக்க ஆச்சியின் குடும்பத்தோடு எங்கள் குடும்பம் நட்புறவு பேணவில்லை.

எனது தாய்வழியில் நெருங்கிய உறவினர் சிலர் பிர தான வீதியின் மறுபுறம் வசித்து வந்தனர். அவர்கள் வீடுகளுக்குப் போய்வரும் போதும் மாணிக்க ஆச்சி யின் முற்றத்தை வழியாகப்பயன்படுத்துவதுண்டு. அதற்காகவும் மாணிக்க ஆச்சியின் குடும்பத்தோடு எங்கள் குடும்பம் நட்புறவு பேணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்க ஆச்சியைப்போல அவரது பிள்ளைகளும் நல்ல குணம் என்று எனது தாயார் அடிக்கடி சொல் வார். அதனை எனது தந்தையாரும் ஏற்றுக் கொள் வார். ஊருக்குள் அவர்களுக்கு நல்லபெயரும் செல் வாக்கும் இருந்ததால் அவர்களுடன் தாராளமாகப் பழகினோம்.

மாணிக்க ஆச்சியின் பிள்ளைகளான ஐயாத்துரை குமாரசூரியர் ஆறுமுகம் திசைவீரசிங்கம் பாலசிங்கம் சரஸ்அக்கா ஆகியோரோடு நன்றாக பழகியபோதும் சிவக்கொழுந்து அண்ணா என்று கேள்விப்பட்டிருந்தேனே தவிர அவரைப்பார்த்தது கிடையாது.

நான் சிறுவயதாக இருக்கும்போது அவர் உத்தியோ கமாகி விட்டதால் 1978 ல் தான் அவரை முதல் முதல் நேரில் சந்தித் தேன். அது ஒரு சம்பவம். ஒருநாள் மாலை ஆறுமணி இருக்கும். அவசரமாக ஒரு செய்தியை சொந்த ஊரான உடுப்பிட்டிக்கு அனுப்ப வேண்டும். இப்போதுள்ள நவீன தொலைத் தொடர்பு வசதிகள் இல்லாத நாட்கள் அவை. விடயத்தை திசை வீரசிங்கத்துக்குச் சொன்னதும் அவர் ஒரு கடித உறையைத்தந்து வீட்டு விலாசத்தை எழுதி செய்தி எழுதிய துண்டை உள்ளே வைக்கச் சொன்னார்.

பின்னர் என்னையும் அழைத்துக்கொண்டு கோட்டை புகையிரத நிலையத்துக்குச் செல்லவும் புகையிரத நிலைய ஐந்தாம் இலக்க மேடையில் காங்கேசன் துறை செல்லும் இரவு தபால் புகையிரதம் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

புகையிரதத்தின் பின்புறத்தில் இணைக்கப்பட்டிருந்த அரச தபால் பெட்டியிலிருந்து இறங்கிய வெண்ணிற உடையில் கெம்பீரமாகக்காட்சியளித்த திரு.க.சிவக் கொழுந்து அவர்களை பி.எம். (அஞ்சல் அதிபர் POST MASTER) என அறிமுகம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தார், திசைவீரசிங்கம். அன்று தான் நான் சிவக்கொழுந்து அண்ணாவை முதல்முதல் சந்தித்தேன். ஆனால் அவர் என்னைப் பற்றியும் எனது குடும்பத்தைப்பற்றியும் நன்றாகவே அறிந்து வைத்திருந்தார். அதுமட்டு மல்ல. ஊரைப்பற்றி ஊரில் லுள்ளவர்களைப்பற்றியும் நன்றாகத்தெரிந்து வைத்திருந்ததை அறிய முடிந்தது.

அவரிடம் ஒப்படைக்கப்பட்ட கடிதத்தில் ஒட்டப் பட்டிருந்த முத்திரையில் பேனாவால் இரண்டு தரம் கீறினார். அந்தக்கடிதம் அடுத்த நாள் உடுப்பிட்டியில் எங்கள் வீட்டாரின் கையில் கிடைத்து விட்டது.

தாமதமாகக் கடிதங்கள் எழுதும்போது மாலையில் புகையிரத நிலையம் சென்று P .M சிவக்கொழுந்து அண்ணாவிடம் ஒப்படைப்பேன். அது அடுத்த நாள் உரியவருக்கு கிடைத்து விடும்.
அவரது சில நடவடிக்கைகள் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

இரவுரெயினில் பயணம் செய்யும்போது அந்தக் களைப்பு தீர ஆகக்குறைந்தது இரண்டுநாட்களுக் காவது நன்றாக நித்திரை செய்ய வேண்டும். அவர் கொழும்பிலிருந்து புறப்படும் ரெயினில் காங்கேசன் துறை போய் மறுநாள் திரும்பி வந்து மீண்டும் கொழும்பிலிருந்து பயணிப்பார். பகல் நேரத்தில் வேறு வேலை களையும் கவனிப்பார். இரவு ரெயினிலும் ஒவ்வொரு புகையிரத நிலையங்களிலும் தபால் பொதிகளைப்பாரம் எடுக்க வேண்டும் பாரம் கொடுக்க வேண்டும். கடிதங்களை தரம் பிரிக்க வேண்டும்.

எப்போதும் தூயவெள்ளை உடைதான். சிறு அழுக்கு கூட அந்த வெள்ளை உடையுடன் ஒட்டி உறவாடா தது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. 1978 இல் பார்த்தபோதும் வெண்ணிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடி, கெம்பீரமான நிமிர்ந்த தோற்றம் 2013ல் பண்டகை பிள்ளையார் கோவிலில் சந்தித்த போதும் அதே தோற்றம்.

அறங்காவலர் சபைத்தலைவராக இருந்து ஆலய தொண்டு செய்தது- வல்லை நெசவு ஆலையை மீண்டும் செயற்பட வேண்டுமென உழைத்தது பற்றி ஓரளவுக்கு அறிவேன். இது தவிர கல்விப்பணி மற்றும் சமூகப்பணி ஆகியவற்றிலும் ஈடுபட்டிருந்தார்.

சிறு சிறு விடயங்களை அறிந்து தன்பங்களிப்பைச் செய்வதிலும் ஆர்வம்காட்டினார். அண்மையில் ஓய்வு பெற்ற நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரனின் இரண்டு நூல்களின் வெளியீடு கொழும்பில் நடைபெற்றது. செய்தி அறிந்து தளையசிங்க அண்ணா மூலம் அவற்றைப் பெற்றுக்கொள்ள பெருமுயற்சி எடுத்ததையும் அறிவேன்.

மரணம் இயற்கை என்றாலும் பிறந்து ஊரிலும் ஊர் மக்கள் மீதும் மதிப்பும் பாசமும் வைத்திருந்த அமரர் சிவக்கொழுந்து அவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாத தொன்றே.

அவரது ஆத்மா சாந்தியடையவும் குடும்பத்தினர் நல்வாழ்வு பெறவும் பிரார்த்திக்கின்றேன்.

உடுவை.எஸ்.தில்லைநடராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காதநினைவில் இருப்பவரே

உடுப்பிட்டிதந்தஉத்தமரே
நடபுக்கு இலக்கணமாய் வாழ்ந்தவரே
அன்புக்குரியசிவக்கொழுந்துஅண்ணரே
திடுக்கிடும் உன் மறைவுச் செய்தி
காற்றினிலேவந்துகாதில் விழுந்ததிலே
ஆராத்துயரில் ஆழ்ந்துநின்றோம்
மறைந்துவிட்டாய் என்பதைநம்பமுடியவில்லை
நீமறையவில்லைஎன் மனதில் இருக்கின்றாய்

சென்ற ஆடி மாதம் இங்கிருந்து
உங்குபறந்துவந்தோம்
உம்முடன் கதைபேசிமகிழ்ந்தோம்
நலமாகதானே இருந்தாய்
புது வீட்டைசுற்றிகாட்டிமகிழ்ந்தாய்
அப்படிஎன்னஅவசரம் தான் வந்தது
சிவனிடம் சேர்வதற்கு
சிவக்கொழுந்துஅண்ணரே

எனக்கும் உனக்கும்உள்ளஉறவு
அரைநூற்றாண்டுக்குமேலானது
**1961**ம் ஆண்டு ஜனவரி **1**ம் திகதிஉதவிதபால் அதிபராய்
பதவியேற்க
இரத்தினபுரிதபாலகத்திற்குவந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைமுதலாய் வரவேற்றவன் நீயல்லவோ?
நல்லதொருஆசானாய் எனை வழிநடத்தினாய்
இதையெல்லாம் என்னால் மறக்கமுடியுமா?
இரத்தினபுரிசிவன் கோயில் வளர்ச்சிக்காய்
நீசெய்தசேவையைமறக்கமுடியுமா?
கொழும்புமுகத்துவாரம் தபால் அதிபராய்
நீ இருந்தவேளைதனிலே
சமயசமூகபணிகள் பலசெய்தாய்
அதன் பயனாய் உன்னைகௌரவிக்க
சமாதானநீதவான் **(JP)** பதவிவழங்கியதுஅரசு
நீபெற்றகௌரவம் நாம் பெற்றதன்றோ

கடைசியாய் சிலாபஉயர் தபால் அதிபராய்
சிறப்பாகபணிபுரிந்துபெருமைபெற்றாய்
சேவையைவாழ்க்கையாய் கொண்டவன் நீ
எனவேதொடர்ந்துசேவைசெய்தாய்
சந்நிதியான் திருப்பணியில் உனை இணைத்துகொண்டாய்
சோதரர்கள் மக்கள் மருமக்கள் யாவருமே
சிறப்புடனேவாழஉதவிசெய்தாய்
எனக்கும் நீசெய்தஉதவிகள் பல

தவகுமாருக்கும் எமக்கும் உள்ளஉறவு
உன்மூலம் வந்தஉறவல்லோ
அவையெல்லாம் எம்மால் மறக்கமுடியுமா?
நீங்காதநினைவுகளைநெஞ்சினிலேவிதைத்துவிட்டு
மங்காதபுகழுடனேமறைந்தாயேநண்பனே
துயரமுறும் குடும்பத்தாருக்கு
ஆறுதல் கூறும் வேளையிலே
உந்தன்ஆத்மாசாந்திபெறவேண்டுகிறேன்

சு ஆறுமுகசாமி
இளைப்பாறியதபாலதிபர்
லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவ ஸ்ரீ சன்முகரத்தினசர்மா நாம அச்சரத்தில் திருவாசகம்

சங்கரா போற்றி மற்றோர்
சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா அல்குற் செவ்வாய்
வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி
மால்விடை யூர்தி போற்றி
இங்கிவ்வாழ் வாற்ற கிவேன்
என்பிரான் கிழித்திட்டெனெ

கண்டது செய்து கருணைமட்
டுப்பரு கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண்
டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப்
பணிசெயக் கூவித்தென்னைக்
கொண்டெனெந் தாய்களை யாய்களை
யாய குதுகுதுப்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னாந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

கணங்கள் எல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்த்தலுமே தான்எனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ

முத்திக் குழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக் கருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரகாண்டம்

(சுந்தரகாண்டம் படிப்பது தடைகள் போக்கி சுபங்களைச் சேர்க்கும் என்பர். இப்பாடலைச் சொல்வது, சுந்தரகாண்டம் முழுதும் படித்த பலன் தரும்)

சீராரும் திறல்அநுமன் மாகடலைக் கடந்தேறி
மும்மதிள் நீளிலங்கை புக்குக்கடிகாவில்
வாராரும் முலை மடவாள் வைதேகிதனைக் கண்டு
நின்னடியேன் விண்ணப்பம் கேட்டருளாய்
அயோத்தி தன்னில் ஓர்
இடவகையில் எல்லியதோது இனிதிருக்க
மல்லிகை மாமலை கொண்டாங் கார்த்ததுவும்
கலக்கியமா மனத்தினனாய் கைகேயிவரம் வேண்ட
மலக்கியமா மனத்தினனாய்
மன்னவனு மறாதொழியக்
குலக்குமராகாடுறைப்போ என்று விடை கொடுப்ப
இலக்குமணன் தன்னொடு கங்கு யேகியதும்
கங்கை தன்னில் கூரணிந்த வேல் வலவன் குகனோடு
சீரணிந்த தோழமை கொண்டதுவும்
சித்திர கூடத்திருப்ப பரதநம்பி பணிந்ததுவும்
சிறுகாக்கை முலைதீண்ட அனைத்துலகும் திரிந்தோடி
வித்தகனே இராமாநின் அபயமென்ன
அத்திரமே அதன் கண்ணை அறுத்தவும்
பொன்ஒத்த மானொன்று புகுந்து இனிது விளையாட
நின் அன்பின் வழிநின்று சிலைபிடித்து எம்பிரான் ஏகப்
பின்னே அங்கு இலக்குமணன் பிரிந்ததுவும்
அயோத்தியர் கோன் உரைத்த அடையாளம்
ஈதுஅவன் கைமோதிரம் என்று
அடையாளம் தெரிந்துரைக்க
மலர்க் குழவாள் சீதையும்
வில் இறுத்தான் மோதிரம் கண்டு
அநுமான் அடையாளம் ஒக்கும் என்று
உச்சிமேல் வைத்து உக்க
திறல் விளங்கு மாருதியும்
இலங்கையர் கோன்மாக் கடிக்காவை இறுத்துக்
காதல் மக்களும் கற்றமும் கொன்று
கடி இலங்கை மலங்க எரித்து
அரக்கர்கோன் சினமழித்து. மீண்டும் அன்பினால்
அயோத்தியர் கோன் தளர் புரையும் அடி இணைபணியச் சென்றான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

பிறப்பன்றே கூர்ந்தார் இறப்புண் டென் றோத
மறப்பேன் மனவுடைவோ மாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்




அமரர் ஸ்ரீமான் கதிரிப்பிள்ளை சிவக்கொழுந்து அவர்கள் இறைபதம் அடைந்த வேளை ஆறுதலளித்த உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும், உடன் வந்து உதவிய வர்களுக்கும், நேரில் வந்து கலந்து கொண்டவர்களுக்கும், தந்தி, உள்நாட்டில் வெளிநாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் மற்றும் கடிதங்கள், பத்திரிகை, கண்ணீர் அஞ்சலி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையம், மலர்மாலை என்பவை மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அஞ்சலி இரங்கலுரை ஆற்றியவர்களுக்கும், பதாதை மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளிலும் இன்னும் பல உதவிகளையும் வழங்கிய அன்பர் களுக்கும், கிரியைகளைச் சிறப்புற நடத்திய சிவாச்சாரியார் களுக்கும், அந்தியேட்டி வீட்டுக் கிரியைகளில் பங்குபற்றி சிறப்பித்தோருக்கும், அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்தோருக்கும், மதியபோசனத்தில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும் இந் நினைவுச் சுடரினை அழகுற அச்சிட்டு உதவிய பாரதி பதிப்பகத்தினருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றிகளை இவ்விடத்தில் தெரிவிப்பதில் மனநிறைவு அடைகின்றோம்.

சிவதேவி இல்லம்
உடுப்பிட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கின்றது

எது நடக்க இருக்கிறதோ அதுவும்

நன்றாகவே நடக்கும்

உன்னுடையது எதை இழந்தாய்

எதற்காக அழுகின்றாய்?

எதை நீ கொண்டு வந்தாய்

அதை நீ இழப்பதற்கு

எதை நீ எடுத்துக்கொண்டாயோ

அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது

எது இன்று உன்னுடையதோ அது

நாளை மற்றொருவருடையதாகின்றது

மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகின்றது

மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்

இதுவே உலக நியதியும்

எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

Bhaarathii Pathippakam , Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org